485

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-கா.] பரீதாபி ஹூ ஆடிமீ [பகுதி-கூ.

உள்ளுறை.

ஐயவினாவின் விடையுரை:—பத்திராதிபர்.	ந௱கூஎ
சொல் வேறுபடுத்தல்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை.	௪௦௫
வருணசாஸ்திரம்:—,, சோமசுந்தரதேசிகர்.	௪௦௮
முருகதாஸ ஸ்வாமி:—,, வீ. சுப்பிரமணிய ஐயர்.	௪௧௧
முத்திரை:—,,சோமசுந்தரதேசிகர்.	௪௨௨
ஆசார விளக்கம்:—,, கர்னல். உ. ஜி. கிங்கு. சி. ஐ. இ., ஐ. எம். எஸ்., சானிடரி கமிஷனர்.	௪௨எ
ஒரு நிருபவிடயம்:—,, எம். எஸ். பிச்சுவையர்.	௪௩௧
புத்தகவரவு:—பத்திராதிபர்.	௪௩௫
பிழைதிருத்தம்:—பத்திராதிபர்.	௪௩௬
மாறனலங்காரம்:—பத்திராதிபர்.	௧எ
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்குமுதலியன:—	

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

486

உ

விளம்பரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளியாகும் "செந்தமிழில்" பிரசுரமாகவேண்டிக் கருதியனுப்புகிற வித்தியா விஷயமானதும், சாஸ்திரவுணர்ச்சியுள்ளதுமான விஷயப்பிரவசனங் களையும், பத்திரிகைக்கனுப்புஞ் சமாசாரங்களையும், ஆராய்ந்தபிப்பிராயமெழுத அனுப்புகிற புஸ்தகங்களையும், நூதனபுஸ்தக ஆராய்ச்சி விஷய சமாசாரங்களையும், "செந்தமிழ்"ப்பத்திரிகை விஷயமாய் ஏற்படக்கூடிய சகலவித லெட்டர்களையும், மணியார்டர் வகையறுக்களையும், ஷை தமிழ்ச் சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய வேலைகளையும், தமிழ்ச்சங்கத்தோடு சேர்ந்திருக்கிற சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை விஷயமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய ஸகல தகவல்களையும் பற்றி எழுதிக்கொள்ளவேண்டியவர்கள் ஷை தமிழ்ச் சங்கம் மானேஜருக்கு எழுதவேண்டியது.

(2) மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பைண்டு ஆகாததாக ஏராளமான சங்கப்பதிப்புப் புஸ்தகங்கள் விற்பனையாகவேண்டியவைகளாக விருப்பதால், ஒரே தடவையில் 50-க்கு மேற்பட்ட பிரதிகள் வாங்க விருப்பமுள்ளவர்களுக்கு இதன் மூலமாகத் தெரிவிக்கிறதென்னவென்றால், அதிகமான பிரதிகள் வாங்குவோர்களுக்கு ஷை தமிழ்ச் சங்கம் பிரஸிடெண்டு அவர்கள் ஒவ்வொரு ஆர்டருக்குத் தக்கவாறு 100-க்கு 40 - ரூபாய் வரை கமிஷன் கழித்துக்கொண்டு ரொக்கமாக விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாமென்று உத்தரவு செய்திருக்கிறபடியால், தேவையுள்ளவர்கள் உடனே மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆபீஸ் மானேஜருக்கு மனுச் செய்துகொள்ளவும்.

குறிப்பு:—சங்கத்தின் மெம்பர்கள், சந்தாதார்கள் சங்கம் ஆபீசுக்கு எழுதும் கடிதம் வகையறாக்களில் தங்கள் பேருக்கு வரும் "செந்தமிழ்" பத்திரிகை விலாசத்தில்கண்டிருக்கிற நிம்பரைக் குறிப்பிட்டு எழுதவும்.

T. A. Subbuvenkatarama Aiyer,

Manager.

487

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௦.] பரீதாபி ௵ ஆடி ௴ [பகுதி-௯.

ஐயவினாவின் விடையுரை.

(௩௯௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

இரண்டாவது வினா:-"விருத்தியுரை." இதனுள் விருத்தி என்பது இடுகுறிப்பெயரா? காரணப்பெயரா? இவற்றுள் இன்னதென்பதை விளக்கல்வேண்டு மென்பதே.

விருத்தியாவது, யாதெனவாராயுமிடத்து நன்னூலுள்,

சூத்திரத்துப்பொருளன்றியுமாண்டைக்
கின்றியமையாதியாவையும்விளங்கத்
தன்னுரையானும்பிறநூலானு
மையமகலவைங்காண்டிகையுறுப்பொடு
மெய்யினையெஞ்சாதிசைப்பதுவிருத்தி

என்னு மிலக்கணத்தாற் காண்டிகையுறுப்புக்கொண்டு சூத்திரத்துச் சொல்லப்பட்ட பொருளேயன்றி யவ்விடத்து முடித்துக்கொள்ளவேண்டும்பொருள்களெல்லாம் நன்கு விளங்குமாறு பிறநூற் கூற்றும், தன்கூற்றுங் கொண்டு உண்மைப்பொருளிற் குறைவுபாடின்றி யுரைப்பதே விருத்தியென விளங்குகின்றது. இதுவே, தொல்காப்பியத்தில்,

சூத்திரத்துப்பொருளன்றியும்யாப்புற
வின்றியமையாதியைபவையெல்லா
மொன்றவுரைப்பதுரையெனப்படுமே.

*

என்னும் சூத்திரத்தால் உரையென்னும் பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது. நூல்களும், காண்டிகையும் போலத் தனக்குப் பிறிதோருரை வேண்டாது, ஆண்டறியவேண்டும் பொருளொன்றும் குறித்துணர வையாது, சொல்லானுணர்த்துதல்பற்றி யுரையெனப் பெயர் பெற்றிருக்கிறது. ஆதலாலிது வாய்ப்பாடமாக வரப்பண்ணவியலாத விரிந்த வுரை யென்பதும் பெறப்படும். வடநூலார் இவ்வுரைக்குப் "பாஷ்யம்" எனப் பெயர்வழங்குவர். பாஷ்யம் உரை என்பன ஒருபொருளுணர்த்தும் வினைப்பகுதியடியாகப் பிறந்த பெயர்.

இதற்கு அகலவுரை யென்றும், விரிவுரை யென்றும் பெயர் வழங்குதலுமுண்டு. இது நூற்பொருளை விரித்துக்கூறுவதுபற்றி இப் பெயர்கள் இடப்பட்டுள்ளன. அதுபற்றியே விருத்தி யென்னும் பெயருமிடப்பட்டதாகக் கொள்ளக்கூடுமோவெனில், விரித்துஉரைக்கும் உரை-விரித்துரை; யெனவரின், விரித்து என்னும் வினையெச்சம் உரையென்னுமுதனிலைத் தொழிற்பெயர்கொண்டுமுடியத் தந்துரை, புனைந்துரை, அணிந்துரை என்பனபோல விரித்துரையென ஒரு தொடராகிமுடியும். இஃதங்ஙனமின்றி விருத்தி என இகரவீற்றுப் பெயராகித் தனித்து வழங்கப்படுகின்றது. ஆதலா லிது பொருந்தாது. இனி, விரி என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு அதனையுடையதென்னும் பொருளில் துகர விகுதிபெறின் விரித்து எனவரும். வரவே இடைநின்ற இகரமும், ஈற்றினின்ற உகரமும் எழுத்துநிலைமாறி விருத்தி என்றாயிற்றெனக் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் கொள்ளுமிடத்து வைசாகி வைகாசி, ஞிமிறு மிஞிறு, விசிறி சிவிறி, பவழம் பழவம், மாகி மாசி, மரதகம் மரகதம், நாரிகேளம் நாளிகேரம் எனவரும் மெய்யெழுத்து நிலைமாற்றம் போல, உயிரெழுத்துநிலைமாற்றமு முண்டோவெனக் கண்டறிய வேண்டும்.

அன்றியும், எழுத்துநிலைமாற்றத்தில் அவ்விருமொழியு மொத்த வரவினையுடைய விகற்பநடைபெறும். பெறவே, விருத்தியென்பது போல விரித்து எனவும் ஒருபெயர் வழங்கப்பட்டு வரவேண்டும். அங்ஙனம் வழங்கப்படாமையால் அதுபொருத்தமுள்ளதாகக் காணப்படவில்லை.

இனி, வடநூலாரும் ஒருவகையுரைக்கு (வ்ருத்தி) வ்ருத்தியெனப் பெயரிட்டு வழங்குகின்றனர். இதனைப் போதாயனவ்ருத்தி, காசிகாவ்ருத்தி என வழங்கும் பெயர்களாற் காணலாம். வடமொழியில் வ்ருத்தி என்னும் பெயருக்கு விவரணக்கிரந்தம் என்றுபொருளெழுதப்பட்டிருக்கிறது. விவரணமாவது மூலபாடப்பொருளை வரைந்துள்ளவுரை. இவ்வியல்பு தமிழ் விருத்தியுரையிலும் அமைந்துள தாதலால் அப்பெயர் இதற்கும் பொருந்துவதாகக் காணப்படுகிறது. ஆதலாலிது எழாமுயிர் இருவாகத்திரிந்த வடமொழியின் தற்பவமே யாகும்.

வடமொழியில் வ்ரு என்னும் பகுதிக்கு நிலைபெறுதற் பொருளும், தி என்னும் விகுதிக்குக்கருவிப்பொருளும் உண்மையால் நூற்பொருள் நிலைபெறுதற்குக் கருவியாகிய வுரை விருத்தியெனப் பொருள்படுகின்றது. இதனை, 'மாறனலங்கார' வுரைகாரர் "உண்மை நிலைநிறுத்தப்படுவதோன்றாய் நடத்துதல் விருத்தியாம்" என்று கூறிய வாற்றானுமுணர்க. இப்பொருளில் அவயவவாற்றல் தோன்ற நிற்பது பற்றி விருத்தி யென்பது காரணக்குறிஎனக்கொள்வது பொருந்துமென்பது துணிபு.

காண்டிகையி னிலக்கணமமைந்த ஒருவகை உரைக்கு வடநூலார் வ்ருத்தியெனப் பெயரிட்டுவழங்க அதனின் வேறாய விரிவுரைக்குத் தமிழர் அப்பெயரிட்ட தென்னையெனின், நூற்பொருளை நிலைநிறுவுதற்குக் கருவியாந்தன்மை அவ் விரிவுரையினு முண்மையாற் பொருந்துமென்க.

அங்ஙனமாயினும் தமிழிற் காண்டிகையும் வடமொழியிற் பாடியமும் விருத்தி என்னும் பெயர் பெறுமையால் இடுகுறியாற்றலும் கொள்ளல்வேண்டும். கொள்ளவே காரணவிடுகுறி யென்பது பெறப்படும். பெறினும் நூல் என்னும் பெயர்க்கு ஆசிரியர் காரணங் காட்டினமைகொண்டு காரணக்குறியெனக் கொள்வதுபோல இதற்கும் வடநூலார் காரணங் காட்டினமைகொண்டும், வடநூலுட் காண்டிகையும் விருத்தி என்னும் பெயரால் வழங்கப்படுதல் கண்டும், காரணக்குறி யென விடைகூறப்பட்டதெனக் கொள்க.

3-வது வினா:—பற்பலர் தத்த மியற்பெயரைச் சாதிமுதலிய பெயரொடு தொடர்புடையதாகக் கைச்சாத்துத் தீட்டும்பொழுது பலவேறு விகற்பவகையாலெழுதுகின்றனரே; அவற்றிற்கெல்லாம் இலக்கணங்களென்ன? உதாரணம்:—சொக்கலிங்கம் என்னும் இயற்பெயருடன் செட்டியார், அல்லது பிள்ளை என்னும் பெயர்களைச் சேர்த்தெழுதும்பொழுது (1) சொக்கலிங்கம்செட்டியார், (2) சொக்கலிங்கஞ்செட்டியார், (3) சொக்கலிங்கசெட்டியார், (4) சொக்கலிங்கச்செட்டியார்; (அல்லது பிள்ளை) எனப்பலவாறாக விகற்பித்தெழுதுகின்றனர். இவற்றுட் சொக்கலிங்கச்செட்டியார் என்பதுபோல் வல்லொற்று மிகுமாறெழுதுவதே வழாநிலையெனச் சிலர் கருதிச் சொக்கலிங்கம்பிள்ளை என்பதுபோல முன்பு இயல்பாக வழங்கிவந்த பெயர்களை யெல்லாம் சொக்கலிங்கப்பிள்ளை, வேலாயுதப்பிள்ளை என விகாரப்படுத்தி வருகின்றனரே; முன்னெழுதிவந்த வழக்குப் பிழையுடையதா? என்பது.

இதற்கு விடையளிப்பதற்கு, முதலில் அவ்வியற்பெயரும் சாதிமுதலியபெயருந் தொடருந் தொடரிலக்கணத்தைப் பற்றிச் சிறிதாராய்ந்து அஃதின்னதொடரென விளக்கி அதற்கேற்ற விலக்கணங் காட்டுதல் விளக்கமுள்ளதாகும். அத்தொடருள் முற்காலத்துவழக்குப் பெரும்பாலும் இயற்பெயர் பின்னும், இக்காலத்துவழக்குப் பெரும்பாலும் இயற்பெயர் முன்னுமாக வழங்கப்பட்டுவருகின்றன. இவ் விருவகை வழக்கினையு நோக்கியே,

> "சிறப்பினாகியபெயர்நிலைக்கிளவிக்கு
> மியற்பெயர்க்கிளவிமுற்படக்கிளவார்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துக்குச் சேனாவரையர் முதலியவுரை யாசிரியர்கள் "வினைக்கொருங்கியலும்வழிச் சிறப்பினாகிய பெயர்க்கும் இயற்பெயரை உலகத்தார் முற்படக்கிளவார்; பிற்படக்கிளப்பர்." என உரைகூறி "உம்மையாற் றவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றானாகிய பெயரும் கொள்ளப்படும்" எனப் பொருள்கொண்டு, அவற்றிற்கு முறையே "முனிவனகத்தியன், தெய்வப்புலவன்றிருவள்ளுவன், சேரமான்சேரலாதன், குருடன்கொற்றன்" என வுதாரணங்காட்டி, "திருவிரவாசிரியன், மாந்தக்

கொங்கேனுதி, என இயற்பெயர் முன்வந்தனவாலெனின் அவை தொகைச் சொல்லாகல்லான் அவற்றின்கண்ணதின் றிவ்வாராய்ச்சி; இயற்பெயர் முன்னிற்றல் பண்புத்தொகை யாராய்ச்சிக்கட் பெறுதும்." என வுரைகூறிப் போந்தனர்.

இவ்வுரையாற் சிறப்பு முதலியவற்றுல்வரும்பெயரு மியற்பெயருந் தொடருந்தொடர் இருவகைப்படுமெனவும், அவற்றுள் ஒன்று வினைக்கொருங்கியலும் வழித்தொடர்வதெனவும், அது தொகா நிலையாகி இயற்பெயரை யிறுதியிலுறப்பெறுவதெனவும், பிறிதொன்று இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் இயற்பெயர் முன்னேனும் பின்னேனும் வேண்டியவாறுநிற்கத் தொடர்வதெனவும் அறியக் கிடக்கின்றன.

வினைக்கொருங்கியலாவது சிறப்பு முதலிய பெயரும், இயற்பெயரும் ஒன்றனையொன்று விசேடியாது தத்தம்பொருளின் சிறப்புத் தோன்ற விட்டிசைத்து வெவ்வேறுநின்று ஒருவினைகொண்டு முடியும் ஒருபொருட் பல்பெயராகிய ஒருவகை அடுக்குத்தொடராய் நிற்றலாம். இதனை, ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான். என்பதனுள் ஆசிரியன், பேரூர்கிழான், சாத்தன் என்னும் பெயர்கள் ஒன்றனையொன்றுவிசேடியாது விட்டிசைத்து வெவ்வேறுநின்று ஆசிரியன்வந்தான், பேரூர்கிழான்வந்தான், சாத்தன்வந்தான் என்னுமளவினவாய்ச் சொற்றொறும்பொருள் சிறந்துநிற்றல் காண்க.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை அங்ஙனமின்றி அதனிருபெயரு மொன்றனையொன்று விசேடித்து ஒருசொற்றன்மை யெய்திநிற்பதாம். இதற்கு உதாரணம் திருவிரவாசிரியன் என்பது. இதில் திருவிரவு என்னுமியற்பெயர் ஏனையாசிரியரை விலக்கி ஆசிரியனென்னும் வருமொழிப்பொருளை விசேடித்தும், ஆசிரியனென்னும் சிறப்புப் பெயர் திருவிரவென்னும் நிலைமொழிப்பொருட்குத் தன்பொருளொடியையின்மை நீக்கி விசேடித்தும் இரண்டுபெயரினும் தனித்தனி பொருட்சிறப்பின்றி ஒருபெயர் மாத்திரையாய் ஒட்டியொருசொற்றன்மை யெய்திநிற்றல் கண்டுகொள்க. இவையே அவ்விருவகைத் தொடருக்குமுள்ள வேறுபாடெனவறிக.

பண்டைக்காலத்துப் புலவர்பெருமக்கள்முதலியோர்பெயர்களுடன் சாதி, குடி, முதலிய பெயர்கள் பெரும்பான்மையும் சிறப்புத் தோன்றக் கூறப்பட்டமையால், ஐயனரிதன், கூலவாணிகன்சாத்தன், சேரமான்சேரலாதன் என இயற்பெயர்க்குப்பிற்கூறுது முற்கூறப்பட்டனவாகவும் ஒட்டி ஒருசொல்லாகாது விட்டிசைத்தனவாகவுங் காணப்படுகின்றன.

இக்காலத்தவர்க்கு இயற்பெயருடன் வழங்கப்படும் கிளைப்பெயர் முதலிய பெயர்கள் சிறப்புத்தோன்ற வருதலின்றி இயற்பெயர்ப் பொருளை விசேடித்து ஒட்டி ஒருசொல்லாய்நிற்றலால் வேங்கைமரம், மான்கன்று என்பனபோல இருபெயரொட்டுப்பண்புத்தொகையாய்ப் பெரும்பான்மையியற்பெயர்க்குப்பின்னும், சிறுபான்மை யியற்பெயர்க்கு முன்னுமாக வழக்குவழிப்பட்டனவாகி வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வழக்கினை நச்சினர்க்கினியார் "திருவிரவாசிரியன் என இயற்பெயர் முற்கூறுவனவும், இக்காலத்தார் மயங்கக்கூறுவனவும் கடிசொல்லில்லைக் காலத்துப் படினே என்பதனுலமையுமென" வழுவமைப்பர். நன்னூல் விருத்தியுரைகாரர் "திணை நிலஞ்சாதி" யென்னுஞ் சூத்திரவுரையில் "திணை முதலியபெயரையும், இயற்பெயரையும் ஒருபொரு ளொருங்கேற்குமாயின் அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்தமரபாம்." என்றும், "சிறப்போஎன்றமையால் முன்வருமென்பதூம், அது வழுவமைதி யென்பதூம் பெற்ரும்." என்றும் உரைகூறி, "குன்றவன்கொற்றன், அருவாளனழகன், பார்ப்பான் பாராயணன்,.........ஆசிரியனமிழ்தன்" எனவும், "கொற்றன்குன்றவன், அழகனருவாளன்" எனமுறையேமாற்றியுமுதாரணங்காட்டி, "இனி இயற்பெயர் முன்வருங்கால் வெண்கொற்றப்படைத்தலைவன், வெள்ளேறக்காவிதி என இறுதிவிகாரமாய் வருதலுங் காண்க" என விகாரவிகற்பமுங் காட்டினர்.

இவ்விலக்கணங்களைக்கொண் டாராயுமிடத்து வினைக்கொருங்கியலும்வழி இயற்பெயர் முற்கூறப்படாதென்றுகாணப்பட்டமையால் இயற்பெயர் முற்கூறப்பட்டு வழங்கும் இக்காலவழக்கு இருபெயரொட்டுப்பண்புத்தொகையென்பதூம், அது இயல்பும்விகாரமுமாகிய புணர்ச்சிகளை ஏற்ற பெற்றி பெற்று வருமென்பதும் பெறப்பட்டன.

அப்புணர்ச்சிவிதிகள் பெரும்பாலும் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணநூல்களிற் கூறப்பட்டுள்ளன. அவற்றி னமையாதனவுளவேல் அவற்றிற்கும் இலக்கியங்கண்டது கொண் டிலக்கணங்கூறுவது முறையாதலால் முன்னோர் வழங்கிய வழக்கு வழிப்பட்டு வழங்குதலே இலக்கணமுடையதெனக் கொள்ளல்வேண் டும். அங்ஙனம் கொள்ளாக்கால், காரிகிழார், சிறுத்தொண்டர், சக் கிரவர்த்தித் திருமகன், என ஆன்றோரான் வழங்கிவந்த பெயர்களும் வழுவுடையனவாம். ஆதலாலின்னோரன்னவை யெல்லாம் வழாநிலை யெனக்கொள்ளவேண்டுமென்பது கருதியே நன்னூலார் "சொற் றொறுமிற்றிதன்பெற்றியென்றனைத்து, முற்றமொழிகுறின்முடிவில வாதலிற், சொற்றவற்றியலான் மற்றையபிறவுந், தெற்றெனவுணர்த றெள்ளியோர்திறனே," என அதிகாரப்புறனடை கூறிப்போந்தனர்.

இங்ஙனம் வடநூலாரும், பொதுவிதி யிலக்கணத்தினமையாத பெயர்களை வழுவமைதியெனக்கொள்ளாது பொருள்விசேடங்கருதிச் சிறப்பிலக்கணம் வகுத்து இக்கணமுடையதாக்குவர். அஃதாவது பொதுவிதியால் விசுவமித்திரன் என முடியவேண்டும்பெயர் விசுவா மித்திரன் என வழங்குதல்கண்டு அதற்கு, இருடியென்னும்பொருள் விசேடந்தோன்ற நீண்டதெனவும், அப்பொருள் விசேடம் தோன் றுதவிடத்துப் புத்தமித்திரன் என்பதுபோல விசுவமித்திரன் என இயல்பாமெனவும் இலக்கணங்கூறுவர் என்பதாம். அவ்வாறே நன் னூலாரும் "வல்லொற்றுவரினே பெயர்த்தொகையாகும், மெல் லொற்றுவரினே யிடத்தொகையாகும் எனப் பொருள்விசேடங்கருதி விதிவகுத்து காட்டினர். அம்முறையே மற்றும் பொதுவிதியினடங் காத பெயர்களுக்கும் அவற்றிற்கேற்ற பொருள்விசேடங் கருதிச் சிறப்புவிதிகற்பித்து வழாநிலையாக்கலும், பொருள்விசேடந் தோன் றுத பெயர்களை மரூஉவின்பாற்படுத்தலும் முறையாதலால் அவற் றிற்கேற்றபெற்றி யிலக்கண முரைத்துக்கொள்ளுமாறு வழக்குநெறி பிறழாது வழங்குதலே தகுதியுடையதாகும்.

ஆதலால் இக்காலத்தவர் பெயர்களும் முற்காலத்தவர் பெயர்க ளுள், மோசிகீரன், மோசிசாத்தன் என்பனபோல அழகுபிள்ளை, பழனிசெட்டி எனவும், அந்துவன்கீரன், பெற்றூன்சாம்பான்என்பன போலச் சுப்பன்செட்டி, சிவன்பிள்ளை, ஆண்டான்கவிராயன் எனவும்,

அந்துவஞ்சாத்தன், பிட்டங்கொற்றன் என்பனபோல முருகஞ் செட்டி, மணியஞ்சேர்வை எனவும், பூதப்பாண்டியன், காரிக்கண்ணன் என்பனபோலச் சத்திமுத்துப்புலவர், நல்லாப்பிள்ளை எனவும், திருத்தக்கதேவர், தருமபுத்திரன், மன்னகுமான் என்பனபோல முருகதாசர், இராமசாமிசெட்டி, சாமிநாதபிள்ளை, முத்தையபிள்ளை, நெல்லையப்பபிள்ளை எனவும் வழக்குவழிப்பட்டு வழங்கப்பெற்று வருகின்றன. இவற்றுட்சில பொதுவிதிக்கிலக்காவனவும், சில சிறப்பு விதிக்கிலக்காவனவும், சில வழக்குவழிப்பட்டனவுமாகிப் பலவேறு விகற்பநடையுடையனவாகக் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம்பொதுவிதிகொண்டு திருத்தப்புகின் மோசிக்கீரன், மோசிச்சாத்தன், பெற்றுச்சாம்பான், பிட்டக்கொற்றன் எனப் பெயரினுருவங்கெட்டுப் பிழைபடுமாறுகாண்க. ஆயின், வேலாயுதப்பிள்ளை யென்பதே வழாநிலையுடையதென விடையளிக்கப்பட்டதென்னெனில், கடவுளின் நாமமாகிய வேலாயுதன் என்னும் பெயர் பிள்ளையென்னும் வருமொழியோடு புணரும்பொழுது கந்தப்பிள்ளை, ஞானசம்பந்தப்பிள்ளை என்பனபோல வேலாயுதப்பிள்ளை யெனல் வழாநிலையுடையதென்னும் ஒருசாரார்கொள்கைபற்றிக் கூறியதேயன்றி வேலாயுதமென்னும் மகரவீற்றுப்பெயரும் சொக்கலிங்கம் பிள்ளை யென்பதுபோல வேலாயுதம்பிள்ளையென வழங்கலாகாதென விலக்கியதன்று. அன்றியும், கடவுளின் சம்பந்தமுள்ள வேங்கடாசலம், அருணசலம், சிதம்பரம் முதலிய தலப்பெயர்களும் மக்களுக்கிட்டு வழங்குதல் வழக்கின்கண் உண்மையால் அவற்றையும் பிள்ளையென்னும் பெயருடன்வழங்குவோர் வேங்கடாசலம்பிள்ளை, அருணசலம்பிள்ளை, சிதம்பரம்பிள்ளை, யெனவழங்குதலும் வழாநிலையுடையதாம். மக்களுக்கிடும் நாமங்களெல்லாம் கடவுளர் நாமங்களாகவேயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லாமையாலும் வேட்டுக்குமான் றனக்கிட்ட முட்டையென்னும் அஃறிணைப்பெயர் உயர்திணைப் பொருளிற், பொய்யாமொழிப்புலவர் பாடலுட் காணப்படுதலாலும் சுந்தரம், அழகு என்றற்றொடக்கத்து அஃறிணைப்பெயர்களையும் மக்களுக்கிட்டு வழங்கும் வழக்கும் வழுவுடையதன்று. ஆதலாற் சுந்தரன் வேங்கடாசலன் முதலிய னகரவீற்று நாமங்களை மகரவீறுக்குதலே வழாநிலையுடையதன்றென்றுகூறியதெனவுணர்க.

இதுகாறுங்கூறியவாற்றால் இலக்கணம் விதிக்கப்படாத சொற்களை, வழக்கும் செய்யுளுமாகிய விலக்கியமே கண்ணகக்கொண்டு நோக்கி, எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர் செப்பினரப்படிச் செப்புதன்மரபெனத் துணிந்து முன்னோர்வழக்கொடுமுரணது வழங்குதலே முறையாமெனக்கொள்க. (தொடரும்.)

பத்திராதிபர்.

சொல் வேறுபடுத்தல்.

வடமொழிதென்மொழிகளிலுள்ள சொற்களுள்ளே பலசொற்கள் காரணச்சொற்களாய் விளங்குகின்றன. காரணச்சொற்களெல்லாம் பகுதிவிகுதி முதலிய உறுப்புக்களின் வலியாற் பொருள் புலப்படுத்தும் இயல்புடையன. அவைகளையெல்லாம் பிரித்துப் பகுதி விகுதி காட்டி முடித்தல் யாவர்க்கும் அரிது. பகுதிகளோ பெரும்பாலும் பொருள் இடம் முதலியவைகளைப் புலப்படுத்திநிற்கும். விகுதிகளோ திணை பால் இடம் முதலியவைகளைப் புலப்படுத்திப் பகுதிகளின் பொருள் வேறுபடற்குக் காரணமாய் நிற்கும்.

விகுதிகளன்றிச் சில சில அடைமொழிகளுஞ் சில சில சொற்களும், பொருள்களும் வேறுபடற்குக் காரணமாகின்றன. வடமொழியிலேவரும் பிர, பரா, அபி முதலிய அடைமொழிகள் வினைமுதன்மை கூறுஞ் சொற்கள் முதலியனவாகப் பலசொற்கள் வேறுபடற்குக் காரணமாகின்றன. ஒரு சொல்லே நின்று பலவகை அடைமொழிகளோடும் புணர்ந்து பலசொற்களாய்விரிந்து பலபல பொருள்களையும் பயக்கின்றன. அங்ஙனமே தென்மொழியிலும் பல சொற்கள் வேறுபட்டு வருகின்றன. சிலவற்றை இங்கே காட்டுதும்.

நயம்.

பிரணயம் - வணக்கம்.
அபிநயம் - கூத்து.
அபநயம் - அகற்றுதல்.
பரிணயம் - விவாகம்.
விநயம் - வணக்கம்.
ஆநயம் - கொண்டுவருதல்.
உபநயம் - கிட்டுதல்.
நிர்ணயம் - நியமித்தல்.
உந்நயம் - உயர்த்துதல்.
துர்நயம் - தீமை.

இங்கே நயம் என்னும் ஒருசொற்றானே பிர முதலிய அடைமொழிகளால் வேறு வேறு சொற்களாய் விரிந்து வேறு வேறு பொருள் பயத்தற்கும் இடனாயிற்று. இஃது இன்னும் அநுநயம் அவநயம் முதலியனவாக வேறுபடுதலும் உண்டு.

காரம்.

பிரகாரம் - அடித்தல்.
அபிகாரம் - தாக்குதல்.
அநுகாரம் - ஒப்பச்செய்தல்.
பரிகாரம் - முற்றவழித்தல்.
பிரதிகாரம் - காத்தல்.
சங்காரம் - கொல்லல்.
உபகாரம் - உதவுதல்.
அபகாரம் - கவர்தல்.
விகாரம் - விளையாடல்.
நிகாரம் - பனி.
அத்தியாகாரம்-விவரித்தல்.
பிரத்தியாகாரம் - தியானம்.

இங்கே காரம் என்னும் ஒரு சொற்றானே பிர முதலிய அடைமொழிகளாலே வேறு வேறு சொற்களாயிற்று.

யோகம்.

உபயோகம் - தகுதி.
வியோகம் - பிரிவு.
பிரயோகம் - செலுத்துதல்.
அபியோகம் - முறையீடு.
அநுயோகம் - கண்டநம்.
சம்யோகம் - புணர்ச்சி.
நியோகம் - அனுப்புதல்.
விநியோகம் - செலவிடல்.

இங்கே யோகம் என்னும் ஒருசொற்றானே உபமுதலிய அடைமொழிகளாலே வேறு வேறு சொற்களாயிற்று. இனித் தென்மொழியிலும் இங்ஙனம் வேறுபட்டு வருஞ் சொற்களுள்ளும் சிலவற்றை இங்கே காட்டுதும்.

கலம்.

அருங்கலம் - ஆபரணம்.
நெருப்பிடுகலம் - தூபமுட்டி
இடுங்கலம் - பிச்சைப்பாத்திரம்.
உண்கலம் - போசனபாத்திரம்.
அணிகலம் - ஆபரணம்.
படிமக்கலம் - கண்ணாடி.
மரக்கலம் - தோணி.
அடுங்கலம் - பாகபாத்திரம்.
இலைக்கலம் - கல்லை.
நன்கலம் - ஆபரணம்.
சேமக்கலம் - எறிமணி.
கொள்கலம் - ஏற்கும்பாத்திரம்.

மா.

பரிமா - குதிரை.
அரிமா - சிங்கம்.
கைம்மா - யானை.
வயமா - புலி.

புகர்மா - யானை. கருமா - பன்றி.
செங்கண்மா - கரடி. பாய்மா - புலி.
மானமா - கவரி. ஆமா - காட்டுப்பசு.

கோள்.

அதர்கோள் - வழிப்பறித்தல். உட்கோள் - கருத்து.
ஆகோள் - நிரைமீட்சி. மீக்கோள் - போர்வை.
கார்கோள் - கடல். ஊர்கோள் - பரிவேடம்.
மேற்கோள் - உதாரணம். குறிக்கோள் - ஒற்றுமை.
கால்கோள் - தொடக்கம். வியங்கோள் - ஏவல்.
கைகோள் - ஒழுக்கங்கொள்ளல். ஊறுகோள் - தீங்கு.

இங்கே கலம், மா, கோள் என்னுஞ் சொற்கள் அடைமொழிகளாலே வெறு வேறு சொற்களாய் மாறி வேறு வேறு பொருள் பயந்து நின்றன. இங்ஙனமே இன்னும் பல சொற்கள் வருகின்றன. இவையெல்லாம் கம்பராமாயணம், கலித்தொகை முதலிய இலக்கியங்களிலே பரக்கக் காணப்படும்.

பொருள் வேறு கூறல் கருதிப் புலவர்களால் வேறுபடுத்தப் பட்ட இவைகளும் இவைபோன்ற சொற்களுமன்றிப் பொருளும் போக்கும் பிறவும் நோக்காது வேறுபடுத்தப்பட்ட சொற்களும் பல வாய் வழங்கப்படுகின்றன. அவற்றுள்ளுஞ் சிலவற்றை இங்கே காட்டுதும்.

தராமான் - தராமரன். கவுடி - கவடி
நோலை - நொலை. பிரவுடை - பிரவிடை.
பாவை - பரவை. இருணம் - இரணம்.
எத்துணை - வேத்துணை. புகா - புகர்.
ஆரக்குவதம் ஆர்க்குவதம். சிரகம் - சீரகம்.

இவ்வாறு வழங்கப்படுஞ் சொற்கள் வலியனவல்ல. சொல் வேறுபட்டும் பொருள் வேறு படாதவைகளுஞ் சிலவுள. அவை குறியதன்கீ ழாகாரவிறுய் நிற்குஞ் சொற்களும், குற்றுகரவீற்று வினைமுதன்மைப் பெயர்களும், பிறவுமாம்.

அரா - அர - அரவு.	அவா - அவ - அவவு.
நறூ - நற - நறவு.	கரா - கர - கரவு.
உணா - உண - உணவு.	புகா - புக - புகவு.
தடா - தட - தடவு.	விரா - விர - விரவு.

மற்றையன பின்னர்க் காட்டப்படும்.

சுன்னுகம் } இங்ஙனம்,
ஆடிமீ } அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

வானசாஸ்திரம்.

(உகஎ-ம் பக்கத்தொடர்ச்சி.)

பூமியினிடஞ்செல்லும் சூரியவெப்பம் மறுபடிதிரும்பிச் சூரியனிடம் சீக்கிரத்திற் செல்லாதபடி ஆகாயமண்டலத்திற் சலபதார்த்தமான புகைப்படலமொன்று பரவியிருக்கின்றது. புதன், சுக்கிரன், குரு, சனி முதலான கிரகங்களிடம் அதனதன் தூரத்திற்குத் தக்கபடி சூரியவெப்பம் தாக்குமாயினும் அவைகளும் பூமியிற்ருக்கும் வெப்பத்தினுமிக்க ஏற்றத்தாழ்வுள்ள வெப்பமுடையனவா யிருக்கமாட்டாவென நம்பலாம். ஆயினும் அவை இன்னும் செவ்வையாக நிரூபிக்கப்படவில்லை. நம்மைச்சுற்றியிருக்கும் வாயுமண்டலத்தைப் பற்றிப் பேசும்பொழுது இவ்வுலகம் அருக்கனிடத்திருந்து பெறும் ஒளியை நடுவிலிருக்கும் ஒளிப்படலமொன்றின்வழியாகப்பெறுகின்றதென ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த ஒளிப்படலமானது பகலில் நக்ஷத்திரமண்டலத்தை மறையும்படியாகவும், இராக்காலத்திற் ரேன்றும்படியாகவும் செய்கிறது. இவ்வொளிப்படல மிராவிடின் நாம் காணும் நீலநிறமான ஆகாயம் கருநிறமாய்த் தோன்றலால் முழுச்சூரிய கிரகணத்தின்போது நாம் நக்ஷத்திரங்களைக் காண்பதுபோற் றெளிவாகத் தாராகணங்கள் பகற்காலத்திற் புலப்படக்காண்போம்.

புதன், சுக்கிரன், ஆதித்தன் மூன்றினுடைய பிரமணங்கள் அதனதன் வட்டத்தின்பேரில் நடக்கின்றனவெனக்கண்டறிந்தோம். இவை யியற்கையான வொருகாரியமாம். பூமியின் பரிக்கிரமமானது (rotation) மற்றைய கிரகங்களைப்பற்றி யறியுமுன்னரே தெரிந்த தென்பதோடு, அது தினமானம்செய்யும் பிரவர்த்திகளா லறியாதா ரொருவருமிலர். ருதுக்களுக்குத்தக்கவாறு மாறு மியல்பினையுடைய சூரியன் காலைப்பொழுதிற் கீழ்ப்பாகத்திற் றோற்றுகிறது. கொஞ்சங் கொஞ்சமாக வெளியேறி அதன் முழுவுருவமும் புலப்படுவதுடன் நாழிகையாக நாழிகையாக மேலேறுகிறது. மத்தியான்னகாலத்தில் அதன் பரிக்கிரமத்தி னுச்சத்தையடைகிறது; அதினின்றும் இதுவரை யில்லைஎவ்வளவு ஒழுங்கான வளைவேற்பட்டதோ அதனைப்பூர்த்திசெய் யும் இறக்கமுண்டாகிறது. சாயங்காலத்தில் மெள்ள மெள்ளக் கீழி றங்கி, அந்திப்பொழுதில் அடிவானத்தினுள்ளே செல்லுகிறது. இம் மாதிரிப் பகற்பொழுதிற் பூமியின் பரிக்கிரமம் தெரிகிறது.

இராக்காலத்தில் தாராகணங்கள் இதேமாதிரியாகச் செய்கின் றன. இப்படிச்சுழலுவதாற் பூமி கிழக்கிலிருந்து மேற்கிற் செல்லு கிறதென்பதும் ஒரேவழியாகச் செல்லுகிறதென்பதும் தெற்றெனப் புலப்படும். இந்தஒரேவழியாகச் செல்வதைத்தான் வானசாஸ்திரிகள் கோளத்தின்மையம் (axis of the world) என்பர். இதுதான் பூமி யின் மத்தியநிலை.

முற்கூறியபடிபூமியின்பிரமணம் (தினமானம்) சற்றேறக்குறைய 24 மணி அல்லது அறுபதுநாழிகைக்குள் ளேற்படுகிறது. இப்படிச் சுழலுவதால் இரவு பகலுண்டாகின்றன. இந்தத் தினமானச் சுழற்சி யைத் தவிர்த்து, மற்றக்கிரகங்களைப்போற் றூனும் சூரியனைச் சுற்றி வட்டமிடுகிறது. இந்தப் பரிவர்த்தனத்தால் அயனமும் ருதுக்களு முண்டாகின்றனவாயினும் இதற்கும் தினமானமுண்டாகும் பரிக்கிர மத்திற்கும் சம்பந்தமில்லை. அன்றியும் இரவு பகல் நீட்டத்திற் கிவ் வட்டமிடுதலே காரணமெனப் பின்னர்க்காட்டுவாம். முதலிற் பிர மணத்தைப்பற்றியே வியவகரிப்போம். நாம்மேலே இந்தச் சுழற்சி அல்லது நித்தியகதி ஒருவழிப்பட்டதென்று கூறியிருக்கின்றோம். இது ஒருவழிப்பட்டதென்று கூறுவதற்குவேண்டிய சாக்ஷியங்கள்

வெகுவாயும் எளிதிலறியக்கூடியவாயுமிருக்கின்றனவாகையால் வான சாஸ்திரிகள் அங்கங்கே ஒவ்வொரு நக்ஷத்திரமும் அதே யிடத்திற்கு வருவதாலுண்டான விட்டங்களைக்கொண்டு அளந்துபார்த்துச்சோதித்திருக்கின்றனர். சாதாரணமாக நாம் இரவில் ஒரு நக்ஷத்திரம் உச்சிக்கு வருங்காலத்தைச் சரியாகக் குறித்துக்கொண்டு மறுபடியும் அதேநக்ஷத்திரம் அதேயிடத்திற்கு வருங்காலத்தைக் குறிப்போமாயின் இப்பூமி பிரமணம் செய்யும் காலம் நன்றாயேற்படும். இப்படிப் பிரமணம் செய்யுங்காலம் ஆங்கிலேய ரீதியாக 23 மணி 56 நிமிஷம் என கணக்கிடப்பட்டிருக்கின்றது. இந்தியர்கள் நித்தியகதி 59 கலை 8விகலை யெனக்கணக்கேற்படுத்தியிருக்கின்றனர். இது ஆங்கிலத்தில் (siderialday) என்றும் தமிழில் நக்ஷத்திரமானம் என்றும் பேர் பெறும். ஆதித்தநாட்கள் அல்லது சௌரமென்பது உச்சியிற் சூரியன் ஒருநாட்டோன்றி மறுபடி அதேயிடத்திற்குவருங்காலமாகும். இந்தக் காலம் முன்னதைவிட நான்கு நிமிஷங்களதிகப்படும். முன்னதற்கும் பின்னதற்கும் வித்தியாசம் முன்னதைவிடப்பின்னது நீண்டதாயினும், முன்னையது எக்காலத்தும் வித்தியாசமிராதது; பின்னையதோ வருடமுழுவதும் சலனமுடையதாயிருக்கும். இந்தச் சௌரமானம் என் அதிகப்படவேண்டுமென்று கேட்பின், பூமியானது நகராது தன்னை மாத்திரம் தானே சுற்றிப் பூமத்தியத்தில் நிற்குமாயின் ஒரு நக்ஷத்திரமான நாளைக்கொடுத்து நிற்கும். அவ்விதமின்றிச் சூரியனையும் சுற்றி ஓடுவதால் உச்சிப்பொழுதில் பூமத்தியம் சூரியனுக்கு நேரிற்றோற்றக் கொஞ்சம்ஓடி நிற்கவேண்டியிருக்கிறது. அதனால், சௌரமானநாள் நான்கு நிமிஷம் நீண்டதாகவிருக்கின்றது. மேலே இந்தச்சௌரமானம் ஒருநியதியுடையதன்றென்றோம். அதற்காக வானசாஸ்திரிகள் மத்திமகாலமென (mean time) எல்லா நாட்களையும்சேர்த்துச் சராசரிசெய்து எற்படுத்தியிருக்கின்றனர். கடிகாரத்திற்குக் கூட இந்தமத்திமகாலநாழிகைதான் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பூமியானது சற்றேறக்குறையக் கோளவடிவினதாயிருப்பதாலும் ஒரேமுகமாகச் செல்லுவதாலும், அதன்பரப்பின் பலபாகங்களினும் பலவிதமான சலனகதி ஏற்படவேண்டியிருக்கின்றது. உத்தரதக்ஷிண துருவங்களில் இதன் சுழற்சி இல்லையென்றே கூறவேண்டும். துரு

வங்களிலிருந்து நிரக்ஷரேகைவரையில் அதனுலுண்டாகும் அர்த்த விட்டங்கள் பெருகிக்கொண்டுபோவதால் நித்தியகதியும் அதிகமாகின்றன. 24-மணிநேரத்திற்குள் பிரான்ஸ்தேசத்திற்குப் பிரதானநகரான பாரிஸ்பட்டினத்திற் சுற்றும்போது அதே அக்ஷாம்சத்தின்கண் வடக்கிலுள்ள ஐஸ்லாந்துதேசத்தின் நகரமான ரெயிக்கியவிக்கிலும் இதே இருபத்துநான்கு மணிநேரத்திற்குள் சுற்றுகின்றது. நிரக்ஷரேகையில் அதே அக்ஷாம்சத்திலுள்ள குவிட்டோவிலுந்தான் சுற்றினபோதிலும் இந்தமூன்று ஊர்களிலும் கதிபேதம் நீட்சிக்குத்தக்கபடியுண்டாகிறது. ரெயிக்கியவிக்கில் சகண்டுக்கு 221-கஜமும், பாரிஸில் 333-கஜமும், குவிட்டோவில் 507-கஜமுமாகிறது. அதாவது மணிக்கு முறையே 450, 682, 1038-மைல் வீதம் பூகோளம் சஞ்சரிக்கின்றது. இவ்வளவு வேகமாக ஓடுமாயின், அதன் சலனத்தை நாமேன் பார்ப்பதில்லை என்பீராயின், நம்மைச் சுற்றியுள்ள சகல பதார்த்தங்களும் மேகம்முதல் எல்லாஞ் சேர்ந்துசெல்வதனுற்றான் பார்க்கமுடியவில்லை. அப்படிக்கின்றிப் பூமி திடீரெனத் தன் கதியை நிறுத்துமாயின் என்னவாகும்? எல்லாம் ஒரேகாலத்தில் நாசமடையும். மானிடர்கள் அறிந்தவரையில் அப்படியொன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இதுவரையில் பூமியின் பிரமணத்தைப்பற்றிக் குறிப்பிட்டோம்; இனிப் பரிவர்த்தனத்தைப்பற்றிப் பேசுவோம்.

பூமி 24-மணி நேரத்திற்குட் டன்னைத்தானே சுற்றுவதுபோல் 365-நாட்கள் 6-மணி 9-நிமிஷம், $10\frac{3}{4}$-சகண்டிற் சூரியனைச் சுற்றிவருகிறது. இந்தியர் கணக்குப்படியும் 365-நாள் 15-கடிகை 30-விநடி $22\frac{1}{2}$ தற்பரை, செல்லுகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இப்படிச் சூரியனைச் சுற்றிப் பூமியோடுவதானது ஒரு வட்டப்பாடுடையதாயிராமல் அண்டாகிருதியா (சற்று நீட்டமுடையதாய்) யிருக்கின்றதாயினும் சூரியன் எந்தவிடத்திினின்று பார்க்கப்படினும் ஒரே மத்தியமாய்த் தோற்றும்படி ஏற்பட்டிருக்கின்றது.

சூரியனிலிருந்து பூமியினது மத்திம அர்த்தவிட்டத்தினளவு 9529800 மைல். சூரியனைச்சுற்றிப் பூமி மணியொன்றிற்குச் சராசரி

68000 மைல் வீதமோடுகிறது. நாம் ஒவ்வொரு விநாடியும் சுழன்று கொண்டிருக்கிறோமென்பதுமன்றி, ஆகாயத்திலும் விநாடிக்கு 19 மைலுக்கதிகமாகப் பறந்துகொண்டிருக்கின்றோம். இப்படியாகச் சலித்துக்கொண்டிருக்கும் ஒரு பொருளின் ஆகிருதியையும் அதன் செய்கையையும் ஊன்றியோசிப்போமாயின் மூளை கலங்கக்கூடும். ஹேமோட்ஸ், மேயர் என்ற இரண்டு பிராக்ஞர்கள் இதனைக் கணக்கிட்டுப்பார்த்து, பூமி திடீரென அதன்காரியங்களை நிறுத்துமாயின் அதனாலுண்டாகும் உஷ்ணத்தால் இவ்வுலகத்திற் சற்றேறக்குறையப் பாதிக்குமேலழிந்து உருகிப் புகைப்படலமாமெனக் கணக்கிட்டனர்.

இவ்விதமாய்ப் பூமியானது ஒரு கணக்காகச் சூரியனைச் சுற்றியோடுமாயின்,அது ஓடுவதற்குத் தக்கபடி சூரியனும் அதற்கெதிராக ஒருவளையமிடுவதாகத் தென்படுமாயினும், இரண்டும் ஒரேதிசையை நோக்கி யோடுமே யொழிய வேறன்று. இதனால் மத்திமரேகைக்குச் சூரியன்செல்லத் தடையுண்டாகிச் சௌரமானத்திற்கும் நக்ஷத்திரமானத்திற்கும் பேதமேற்பட, மேற்கிலிருந்து கிழக்கே செல்லவும், பூமியின் கதியிலும் கொஞ்சம் பேதமுண்டாகிறது. இதனாற் சூரியனும் பெயர்ச்சியுடையவனாகிறானென்பது தெற்றெனப் புலப்படும். ஆண்டின்வளர்ச்சி, அதாவது பூமிதனதுவட்டத்திற் பெயர்ந்தவிடத்தில் வந்துசேர ஏறக்குறைய $365\frac{1}{4}$ நாட்களாகும். அப்படியாயின், பூமி எத்தனைதரம் சுற்றினால் $365\frac{1}{4}$ நாட்களில் வரும்? ஒருதரம் பெயர்ந்த விடத்தைவிட்டு மறுபடி அதே யிடத்திற்குவர ஒன்றாயிற்று. ஆயினும் இரண்டுதரம் தொட்டபிறகன்றோ ஒரு சுழற்சி கணக்காயிற்று. இதுபோன்றே $366\frac{1}{4}$ சுற்றுத்தீர்ந்தால் $365\frac{1}{4}$ சௌரமானநாட்களுண்டாகின்றன. இதுகொண்டு நக்ஷத்திரமான நாட்கள் குறைவென்பது வெளியாகும்.

பாஸ்கராசாரியார் இயற்றிய சித்தாந்த சிரோமணி என்னுங்கிரந்தத்துட் கோளாத்தியாயத்தின்கண்ணே சாவன நக்ஷத்திரமானங்களைப் பற்றிப் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

ஏதாவது ஒருதினத்தில் அருக்கனும் ஒரு நக்ஷத்திரமும் உதயமாகுமாயின், மறுபடி அத்தாரகை அதேயிடத்திற்கு வந்துசேர 60-நக்ஷத்திரமானக் கடிகைகள் செல்லும்; ஆதித்தனோ சூரியநித்திய

கதியையும் எந்த மாதத்தில் இது நிச்சயிக்கப்படுகிறதோ அந்தமாத ராசிமான நாழிகையையும் பெருக்கிக் கூட்டியதொகையை 1800க்கு ஈய உண்டாகும் தொகைகூடச் சூரியனுதிக்கும். இது சாதாரண நாள் அல்லது பூமிசாவனதின மெனப்படும். இந்த நாளின் நாழிகை சூரியகதி பேதத்திற்கும் அக்ஷாம்சத்திற்கும் தக்கபடியாம். நக்ஷத்திரமானம் யாதொருபேதமின்றி அறுபதுநாழிகையேயாகையாலும், சாவனம் அதனுடன் சூரியநித்தியகதிக்குத்தக்கபடி பேதமுடைமையாலும் நக்ஷத்திரங்கள் ஒரு சுற்றுக்குறைவானது. சௌரவ ஆண்டின் கூடுதல் 365 நாள் 15 கடிகை 30 விடிை $22\frac{1}{2}$ தற்பரையாம்; அல்லது 365 நாள் 6 மணி 12 நிமிஷம் 9 சகண்டு. சூரிய சித்தாந்தப்படி 365 நாள் 6 மணி 12 நிமிஷம் 36·56 சகண்டாம்.

ஒரேயிடத்திலிருக்கும் நாம் நாளுக்குநாள் சூரிய உதயாஸ்தமனங்களிற் பேதத்தைக்காண்கிறோம். ஒரு நாளில் நாழிகைகூடுதலையும் குறைதலையும் உணர்கிறோம். பலவிதமான சீதோஷ்ணங்களையும் அநுபவிக்கிறோம். இவைகட்குத்தான் ருதுக்களென்று பெயர். இதற்குக் காரணம் பூமியின் நிரந்தரமான சுழற்சிதான். ஆயினும் இதனையியக்கும் பலமொன்றிருக்கின்றது; அதனைப்பற்றிக் கவனிப்போம். கோழிமுட்டைவிருத்தமாக நமதுபூமிசுற்றும் மண்டலமிருக்கின்றதன்றோ. அதிற் பூமியானது தான் பிரமணஞ்செய்யும் மத்திய ரேகைக்கும் பரிவர்த்தன ரேகைக்கும் செங்குத்தாயோடாது 66 பாகை 32 கலை 42 விகலை சாய்வாகவே யோடுகிறது. இச்சாய்வானது வருஷாந்த முழுமையும் நிரந்தரமென்றே சொல்லலாம். பிரமணரேகை சாய்வாயினும் பூமத்தியமாத்திரம் ஒருபோதும் தவறுவதில்லை யென்பதுஞாபகமிருக்கவேண்டும். அது தவறுமாயின் உலகம்நடவாது நிர்மூலமாகி விடுமென்பது திண்ணம். இப்பூமத்திய நிலையும், (ஆதிசேஷன் தலையிற் பூமியிருக்கிறதென்பதென்றே கொள்ளும் விஷயம்) பூமிக்கும் நக்ஷத்திரமண்டலத்திற்குமுள்ள தூரமும் சேர்தலால் நாம் எவ்விடம் போய்ப்பார்த்தபோதிலும் ஆகாயத்திற் கிராகணங்கள் முதலியவற்றை ஒரே நிலையாகக் கணக்கிடுகிறோம்.

பூவலயத்தில் (சக்கிரவாளகிரி) பூமி சஞ்சரிப்பதில் முக்கியமாக நான்குஸ்தானங்களிருக்கின்றன; அவைகள் ஒன்றற்கொன்று எதிரி

டையாக ஏற்பட்டு இரவு பகல்களைச் சமப்படுத்திப், பருவங்களையு முண்டாக்குகின்றன; இவைகளே விஷுக்களும் அயனங்களுமாம்.*

மார்ச்சுமீ 21உக்குச் சமீபத்திற் சைத்திரவிஷுவும், ஜூன்மீ 21உக்குத் தக்ஷிணாயனமும், செப்டம்பர்மீ 22உக்குத் துலாவிஷுவும், டிசம்பர்மீ 21உக்கு மஹாசங்கிராந்தியான உத்தராயணமும் ஏற்படுகின்றன. இதுமுதற்றான் ருதுக்களுண்டாகின்றன. மேற்கூறிய தேதிகளிலிராவிடினும் அறுபது நாழிகைக்குட்பட்ட வித்தியாசம் வருமேயொழிய அதற்கு மேற்படாதென்பது சித்தாந்திகள் துணிபு. இதனுண்மையைப் பல வருடத்திற் பஞ்சாங்கங்களைக்கொண்டு அறிந்துகொள்ளலாம் இந்த எதிரிடையான விஷுநாட்களிற் பூமத்தியரேகை (Equator) யை நீட்டுவோமாயின் சூரியனதுமத்தியிலூடுருவிச்செல்லும். இப்படிச்செல்லுவதால் எந்த அக்ஷாம்சத்திற் பார்த்தபோதிலும் பூமியானது தனது பிரமணத்திற் பாதி ஒளியிலும், மற்றொருபாதி இருளிலுஞ் செல்கின்றதென்பது புலப்படும். அன்று இரவு பகல்கள் சமநிலையுடையன.

மேஷாயனமுதற் கடகாயனம்வரையிற் பூமி தனது மத்தியரேகையிற் சஞ்சரித்தபோதிலும் வடமுனையானது கொஞ்சங்கொஞ்சமாகச் சூரியன்பக்கமாகத் திரும்புகிறது. வடதுருவம் திரும்புமாயின் அதற்குஎதிரிடையாயுள்ள தென்முனை தூரமாகிறது. அப்பொழுது இரவு பகல் வித்தியாசப்பட்டு ஜூன் 21உயாக உன்னதத்தையடைகிறது. அருக்கனொளி அதிகமாகப்படப் பகல் நீட்டித்தும், தென்முனைப்பக்கம் இருளிலிருக்கவும் நேரிடுகிறது. ஜூன் 21உ முதல் செப்டம்பர் 22உ வரையில், அதாவது கடகாயனமுதல் துலாயனவரையில் விலக ஆரம்பிக்கின்றது. தக்ஷிணதுருவமோ அந்தகாரத்தில்

---

* சூரிய சித்தாந்தம்:—ஆகாயமண்டலத்தில் விஷுக்களிரண்டும் எதிரிடையாக ஏற்பட்டிருக்கின்றன; அதுபோன்றே அயனங்களுமாம். நாடிவலயத்தில் இந் நான்கும் பொதுவானவை.

இப் பொதுப்பாகங்கள் இரண்டிற்கு மத்தியில் இரண்டு சங்கராந்திகள் இராசிமண்டலத்தில் இரண்டு ராசியாரம்பங்களுண்டாகின்றன.

மகரத்திற் சூரியன் பிரவேசித்த காலமுதல் உத்தராயணமும், கடகத்திற் பிரவேசமானதுமுதல் தக்ஷிணாயனமுமுண்டாகின்றன.

அக்காலமுதல் இரண்டிரண்டு மாதங்கள் சிசிரமுதலிய ருதுக்களெனப் படும்.

ழூழ்குகிறது. முன்னுலேற்பட்ட பகல் நீட்டித்தது வரவரக் குறைகிறது. இங்கு இடைவிடாது ஆறுமாதகாலம் சூரியன் பிரகாசிக்கத் தக்ஷிணதுருவத்தில் ஆறுமாதம் இருளாயிருக்கும். இதனையுணர்வோமாயின், இதற்கு மேற்பட்டகாலம் இதற்கு எதிரிடையாக விருக்குமெனத் தெற்றென விளங்கும். துலாயனத்திற் சமநிலையும் பிறகு ஏற்றத்தாழ்ச்சியு முண்டாகின்றன.

முன்னர்ப் பருவங்களில் வித்தியாசம் குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக்காரண மென்னவெனிற் பூமி விருத்தாகாரமல்லவென்பதும் கோழிமுட்டை வடிவினதென்பது மொன்று. அருக்கன் அதன் மத்தியத்திலிராது கிரணவொளி மத்தியத்தி (Foci)யிருப்பதொன்று. இவைகளோடு இராசிமண்டலம் அயனமத்தியிற் செல்லுவதுமில்லை. இதனுல் மாரிக்காலம் பகற்பொழுது குறைவாயும், கோடைக்காலம் அதிகமாயுமிருக்கிறது. வசந்தம் சற்று மத்தியமானது. ஒவ்வொரு கிரகமும் பலவித கதியோடு செல்லுகிறது. அதனிலும் கிரணமத்தியத்தைச் சமீபிக்கும்போது இன்னும் அதிவேகமாய்ச் செல்லுகிறது. இக்காரணங்கொண்டு பூமி வேனிற்காலத்திற் சற்றுக் குறைவாய்ச் சஞ்சரிப்பதால் வித்தியாசமுண்டாகிறது.

இராசிமண்டலத்தில் ஜுலைமாத முற்பாகத்திற் சூரியனிலிருந்து அதிக தூரத்திலும், டிசம்பர்மாதக் கடைசியிற் சமீபத்திலும் பூமி பரிவர்த்தனம் செய்கிறது. சூரியன் வசந்தனிலும் வேனிற்காலத்திலும் அதிகதூரத்திலிருந்தும் சூரியவெப்பம் அதிகமாகப் பெறுகிறோம். இக்காலங்களிற் பூமியின் வடதுருவம் சூரியனை நாடிப் பிரமணஞ் செய்வதால் அருக்கனொளி அதிகமாகப்படுகிறது. இம்மாதிரியாகக் கடகாயனம்வரையிலேற்பட உஷ்ணமதிகரிக்கக் காரணமாகின்றது. கபாலத்துக்கு (அநுமானவானம்) மேற் சூரியன் தோற்றுவதொன்று. இதனுலொளிரேகை சைத்திரவிஷு முதல் தக்ஷிணயனம் வரையில் வரவர அதிகமாயும், பிறகு துலாவிஷு வரையிற் குறைந்தும் வருகிறது. கிரணங்கள் அதிவக்கிரமின்றிப் பூமியின் மேற்படுகின்றன. சூரியவெப்பம் உக்கிரமின்றிக் கிரணங்கள் படுவதற்குத் தக்கபடி அதிகமாகிறது. தக்ஷிணபாகத்தி லிதற்குமாறுயேற்படுகிறது.

(தொடரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

சிவமயம்.

Murugadasa Swamy

முருகதாஸ ஸ்வாமி.

எத்தேசத்துப் பாஷையையும் நன்குபரிசிலனைசெய்து படிக்க வேண்டியதற்கு உபகரணங்கள் பல உள்ளன. அப்பாஷை வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த புலவர்களின் சரிதைகள், பாஷாந்திரவிஷயங்கள்கொண்டக்ரந்தங்கள், முதலியவைகளே பின்வரும் ஸந்ததியாருக்கு விசேஷமான ஞானம்தந்து அவர்களின் குணாதிசயங்களை உருப்படுத்தி முன்னுக்குக்கொண்டுவரும் தன்மையுடையனவாதல்பற்றி, எப்பாஷையிலுமுள்ள இவ்விதமானக்ரந்தங்கள், பாஷாஞானம் செவ்வையாய்ப் பெறக்கருதும் எவரும் நுண்ணிதில் ஆராய்ந்து அறியவேண்டும். அநாதியான தமிழ்ப்பாஷைகற்றுவல்ல வித்வான்களின் சரிதங்கள் பல கர்ணபரம்பரையிலும் ஓரோவிடங்களிற் செய்யுள் ரூபமாயும், கேட்கவும், காணவும் முறையே கூடுமாயினும் அவையாவும், முருகதாஸர் இயற்றிய புலவர்புராணத்தைப்போல் ஏதாயினுமோரொழுங்குபற்றி எழுதப்படவில்லை.

சென்னை ஸர்வகலாசாலை ஏற்பட்ட சுமார் நாற்பது வருஷகாலம் வரைக்கும், இம்மாதிரியான தமிழ்ப்புலவர்களின்சரித்திரங்கள், அவரவர்களிருந்த காலவரையறைகளைப்பற்றி அறிய எவரும் ஸ்ரத்தை கொண்டாரிலர். இத் தமிழ்ப்புலவர்களின் சரித்திரங்கள் முதலியவற்றை ஏதோ சுமாராய் அரைகுறையாய் அறிந்துகொண்டே தமிழ்மாந்தர்களும் பரீக்ஷைப்பிள்ளைகளும் தமிழ்ப்பாஷையை ஒருவிதமாய்ப் பயின்று வந்தனர்.

இம்மாதிரியான குறைவு தமிழ்ப்பாஷைக்கு இருப்பதை நிவர்த்திக்கவேண்டி, ஸர்வகலாசாலையார் முயன்றார்கள். யாவேனுந் தமிழ்ப்புலவர் சரிதங்கள் பண்டைக்காலத்து வித்வான்கள் எழுதிய ஏட்டுப்பிரதிகளிலிருக்கின்றனவா? என்னும் விஷயம்கூடப் பலநாள் காறும் ஒருவருக்கும் எட்டாமல் இருந்தது. உயரிய தமிழ்ப்புத்தகங்களின்

நடைப்போக்குகளிலிருந்தும், பிறவற்றிலிருந்தும், ஒருவாறுஅறியக் கூடிய புலவர்சரித்திரங்கள் சிலவே யிருக்குமாதலால்,ஸர்வகலாசாலை உயரியபரீக்ஷைகளுக்கு வேண்டிய தமிழ்மொழியின் வரலாறுமுதலிய விஷயங்களைச் செவ்வனே அறிய ஸரியான ஆதாரமில்லாமல் வருந்தினவர் பலர்.

இத்தருணத்தில் தென்னிந்தியாவில் வஸிக்கும் புலவர்களின் இல்லங்களிற் சிரமப்பட்டு விசாரித்துக்கிடைத்த புலவர்புராணச்சுவடி 1901ம்வருஷத்தில் அச்சிட்டு வெளிப்போந்தது. இவ்வருமையும் பெருமையும் வாய்ந்த புலவர்புராண நூலாசிரியர்தான் முருதாஸஸ்வாமி. திருநெல்வேலியின் ஸ்வதேசியாகிய இம் முருகதாஸஸ்வாமி இல்லறத்தை விட்டுத் துறவறம்பூண்ட ஸந்யாஸி. இவர் பெயர் மாத்திரையினுலேயே இவரை ஷண்முகோபாஸகர் என அறியலாம். வரகவியாகிய இந்த ஷண்முகதாஸரைப்பற்றி மிகவும் சரியான விவரங்கள் நன்ருய் அறியக்கூடவில்லையாயினும், திருநெல்வேலியில் கி. பி. 1838-வருஷத்தில் இவர் ஜனித்தார் எனத் தெரிகிறது. இளம்பிராயத்தில் தம் நண்பர்களுடன் எப்போதும் விளையாடிக் காலங்கழிப்பதிலேயே பிரியமுடைய இவர் தமது பத்தாவது பிராயத்திற்கு முன்னரே பையன்களோடு கோலிவிளையாடுகையில் பன்னிருகையனம் ஷண்முகமூர்த்தியாகிய ஸேனாபதிமீது பன்னிருமாலை என்று ஒரு சிறந்தஸ்தோத்ரம் ஆசுகவியாகப் பாடினுர்.

இம் முருகதாஸர் தம் சுதேசத்திலிருந்து வீடுவிட்டு வெளியேறும் பருவமடைந்தபின், அநேக சிவஸ்தலங்களுக்கும் விஷ்ணுஸ்தலங்களுக்கும் இவர் யாத்திரைபோயினர். தாம் தரிசித்த ஸ்தலங்கள் விஷ்ணுஸ்தலங்களாயினும், சிவஸ்தலங்களாயினும், அவற்றின்மீது யாதொருபகைமையும் பாராட்டாது, அப்பொழுது பதிகங்கள், மாலைகள், திருப்புகழ்கள் முதலியவெல்லாம் மனமுருகிப்பாடும் இயல்பினராயிருந்திருக்கிறுர் என்பது எமக்குப் பழைய புலவர்களிடமிருந்து கிடைத்த சில ஏட்டுப்பிரதிகளிலிருந்து அறியக்கூடியதாயிருக்கிறது. இவர் தேசசஞ்சாரம்செய்ய ஆரம்பித்த சில நாட்களில் இவரது மடாலயப்பழக்கங்களில் விசேஷமான தமிழ்ப் புலவர்களைப்பார்த்து ஸம்பாஷிக்க நேர்ந்தது. வித்வ ஸபைகளிற் பலவற்றில் தென்னிந்தியா

விற் பயின்று ஆங்காங்குள்ள வித்வசிரோமணிகளின் அருமை பெருமைகளை மனதிற் செவ்வனே பதிந்துகொள்வாராயினர். இவர் இலங்கைபோன்ற ஜலமத்ய தேசத்திற்கும்போய், வேதபாரக தத்வ சாஸ்திரிகளான வித்வான்கள், நீதியுபதேசம் செய்யத் தமிழ்ப்புலவர் கள் பலரிடத்தும், அநேக அருமையான நூல்களிடத்தும் தம் அதி தீவிரமான கவனத்தைச் செலுத்திவந்ததனால், உலகுக்கு எவ்வள வோ உபகாரமாயிற்று. குசாக்ரபுத்தியும் முன்யோசனையும், தமிழ்க் கல்வியுணர்ச்சியுமுடைய இவர், பக்திமானும், புத்திமானுமாயிருந்த மையாலும், சொல்வன்மையுடைமையாலும் எவருடைய சரித்திரத் தையும் நன்றாக எழுதுவதற்குத் தக்கவராயினர். மதச்சார்பையொட் டினமட்டில் இவர் எழுதும் விஷயம் கவனிக்கத்தக்கது. வரகவியா கிய இம் முருகதாஸர் தம் காலத்திற் பிரபலமாயிருந்த அநேகவைதிக மதங்களின்மீதும், மடாதிபதிகளின் பல்வகைப்பட்ட ஸமயங்களின் மீதும், இவர் எவ்வளவு அபிமானமும், அநுதாபமும், பக்தியும் கொண்டிருந்தார் என்பது நன்கு தெரியவில்லையாயினும் தம் முன் னோர் அநுஸரித்துவந்த சைவமதத்தையே மற்றையமதங்களைக் காட்டிலும் உயர்வுதாழ்வு என்று சண்டையிட்டு மண்டையுடைத்துக் கொள்ளும் சிலரைப்போல் இல்லாமல் பிதுராசாரம் பிரதானமென இப்புலவர்கொண்டிருந்துவந்தனரே போலும் என்பது இவர் செய் யுள் ப்ரபந்தங்களிலும் அறியலாம். இப்படியிருந்தும் இவர் ஒருநா ளும் வைஷ்ணவநிந்தனையாவது, மஹாவிஷ்ணு தூஷணையாவது செய்தாரென்பது இவர் இயற்றிய செய்யுட்களில் காணக்கிடைக்க வில்லை. இன்னசமயம் உயர்ந்தது, இன்னஸமயம் தாழ்ந்தது என்ற ஸமயப்பிரவர்த்திகளுக்கு அடுத்த வாதானுவாதங்களை அவ்வளவு தூரம் அவர் ரஸிக்கவில்லையெனவே தோன்றுகிறது. ஸ்ரீரங்கம் போன்ற சிறந்த விஷ்ணு ஸ்தலங்களுக்கும், சிதம்பரம்போன்ற மஹா சிவஸ்தலங்களுக்கும் வைணவம் சைவம் என்ற பேதாபேதமில்லா மற்சென்று அக்கடவுளர்களை மிகுதியும் புகழ்ந்து பாடிய செய்யுள் களும் ஒரோவிடங்களில் அகப்படுகின்றன. இந்த ஸ்தலங்களேயில்லா மல் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள வளவனூர் குமாரபுரி முதலிய விடங்களிலும் சென்று, ஆங்காங்குள்ள அபிமானஸ்தலங்களிலுள்ள எம்பெருமான்களின்மீதும் பாசுரங்கள் பரிந்துபாடி மகிழ்வித்திருக்கி

ரூர் என்பதும் தெரிகின்றது. தமிழ்ப்புலவர்களின் சரித்திரங்களை எழுதும்போதெல்லாம் இவர் அவ்வக்கவிகளின் அருமை பெருமைகளையும், அவர்செய்த நூல்களிலுள்ள பாஷாந்திர ஞானத்தின் பெருமைகளையும் கொண்டாடிக் கூறுமலிருப்பதில்லை.

புலவர்புராணம் பாடத்தொடங்கிய இவர் கடவுள் வாழ்த்தில் முதலிற் போதுத்தெய்வம் என்று குறிப்பிட்டு

"யாவரெவ்வண்ணஞ்சொல்வாரவ்வணமிசைந்துநின்ற
மூவலற்றெளிருந்தொல்சீர்முதற்பரம்பொருளைவாழ்த்திக்
காவலர்வெருண்டுபோற்றுங்கவித்தமிழ்ப்புலவர்காதை
யாவல்கொண்டுரைக்கலுற்றேனதுவுமென்செயற்பாற்றன்றே."

இப்பாடலை முதலிற் சொல்லிக்கொண்டு மற்றைய கடவுளைத் துதிக்க ஆரம்பித்தமையால், இவர் எல்லாமாயல்லவுமாயிருக்கப்பட்ட ஒப்பற்ற ஒரு பெருங்கடவுளையன்றி, சிவன், விஷ்ணு, பிரம்மா வென்ற கடவுளர்களைக் கடவுளர்களாகக்கொள்ளாது பரப்ரம்ம ஸ்வரூபத்திலேயே த்ருஷ்டியுடையவராயிருந்தவரென்பது தெற்றெனப் புலனும். இத்தகையர் எப்புலவர்கள்மாட்டும் புராதனப் புலவர்கள் போற் பட்சபாதம் பாராட்டாது ஒவ்வொருபுலவரைப்பற்றி எழுதும் போதெல்லாம் நிஷ்பக்ஷபாதமாய் எழுதியுள்ளார் என்பது அவரது புலவர்புராணம் உணர்ந்தறிந்தோரே யறியக்கூடியதாகும். ஒவ்வொரு புலவர்களின் குணவிசேஷங்களையும்பற்றி நன்குணர்ந்து உலகிற்குதவிய இவர் புகழ்ச்சிக்கு உரியவரேயாவர். இவர் வாழ்நாட்களை வீண் நாட்களாக்காது, தாம் சென்றவிடங்கள் எல்லாவற்றிலுமுள்ள நவீன விசேஷவிஷயங்களையும், ஞானபாகமாயுள்ளவற்றையும் அறிந்து போதிப்பதிலேயே தம் அருமையானகாலத்தைச் செலவிட்டார். இவர் தமது இருபதாவது வயதிற் சென்னைக்கு வந்து அங்குள்ள கந்தஸாமி ஆலயத்திற் கூடியிருந்த வித்வக்குழாங்கள் இப்படியு முண்டோவென்று ப்ரமித்துத்திகைக்க ப்ரஸங்கமாரி பொழிந்தாரென்றும், இவர் ஆசுகவி செய்வதின் வல்லமையைப் பெரிதும் போற்றிப் புகழாதார் எவருமிலரென்றும் சொல்லுகிருர்கள். இவர் தம் ஜீவியகாலத்திற்குள்ளாக லட்சம் செய்யுள், ஞானமார்க்கமான

சதகங்களும், பதிகங்களும், அநேகபுராணங்களும் பாடியிருப்பதாகத தெரியவருகிறது. தில்லைத்திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், ஏழாயிரப்பிரபந்தம், நான்குநூல், திருமகளந்தாதி, ஏகபாதத்திதழக லந்தாதி, தெய்வத்திருவாயிரம், பழநித்திருவாயிரம், அருணகிரி நாதர்புராணம்,பதிகச்சதகம், சதகப்பதிகம், திருச்செந்தூர்க்கோவை திருச்செந்தூர்த் திருப்புகழ், திருவாமாத்தூர்த்தலபுராணம் முதலி யன இவர் இயற்றிய நூல்களிற் சிலவாம். இப்புராணங்கள், சதகம், பதிகம் முதலியவற்றிலெல்லாம் உலகிற்கும் ஒருசேரத்தமிழ் உணர அவாவுறும் மாணுக்கர்க்கும் ஒரு சேர இன்பமும் நன்மையும் பயந்து பாஷாந்திர ஞானத்தையும், அவற்றின் அருமை பெருமைகளையும் ஊட்டவல்லதாயிருப்பது இவர் இயற்றிய புலவர் புராணமேயாதலால் இது செய்த இப்புலவர்பெருமானுக்குத் தமிழுலுகம் மிகக் கடமைப் பட்டுள்ளது. ஆகவே இப்புலவர் புராணமே இவர் செய்தவைகளில் உலோகோத்தரமான தென்னலாம். அத்வைத, சைவ, வைஷ்ணவ, ஜைன, பௌத்தஸமயாநுசாரமான நூல்களையும் நன்கு ஓதியுணர் ந்த இவர் மதம் அத்வைதமே என இவர் செய்த நூல்களினுல் தெரி யக்கிடக்கின்றது.

துறவாச்ரமத்திலேயே காலங்கழிக்கக் கருதிய இவர் தேசசஞ் சாரஞ் செய்துவந்தபொழுது பூர்வஜன்மாந்தர வினைப்பயத்தினுல் தம் மரபிற் கல்வியிற் சிறந்த ஒரு கன்னிகையை மணந்தபோதிலும், துறவிபோலவே காலங்கழிப்பாராயினர். பலதேசங்களிலும் சஞ்சா ரம் செய்துவந்த இவர் தாம் மணந்த மனைவியுடன் தென்னுற்காடு ஜில்லா விழுப்புரம்தாலூகாவின் வடதிசையிலுள்ள இரட்டைப்புலவர் கலம்பகம்பாடிய திருவாமாத்தூர்க்ஷேத்திரத்தைத் தமதிருப்பிடமாகக் கொண்டு திருவாமாத்தூரீசனை அல்லும் பகலும் அனவரதமும் ஸேவித்துக்கொண்டு காலங்கழியா நின்றுர். இவருக்கு அவள் வயி ற்றில் ஜனித்த குமாரர் ஒருவர் தம் தந்தையைப்போல் தமிழ்க்கல்வி யிற்சிறந்து திருவாமாத்தூரிலேயே இன்றும் வசித்து வருகிறுர் என அறிகிறேம். திருவாமாத்தூரிலேயே வஸித்துவந்த முருகதாஸர் பல ஸாது ஜனங்கள் வித்துவான்கள் முதலியவர்களின் வேண்டுகோ ளின்பேரில் விழுப்புரத்திற்குக் கீழ்த்திசையில் ஐந்து மைல் தூரத்தி லுள்ள ப்ரௌடதேச மகாராஜபுரம் என்று பல்லவராயன் முதலி

யோர்களாலும், வளவனுலும் ஆளப்பட்ட ப்ரம்மாலயங்கள் மிக்க வளவனூர் வந்துசேர்ந்து, ஆங்குப் பஞ்சம்புகுந்து வருத்தியகாலத்திற் சிவன் கோயிலிற் புகுந்து பாசுரங்கள் அளிக்க மழைபெய்து ஸுபிட்சமடைந்ததாகக் கர்ணபரம்பரையினு லறிகிறோம். இவர் ப்ராமணர்களிடத்தில் மிக்க பிரியமும் விச்வாஸமும், பக்தியும் கொண்டவர் என்பது, தம்முடன் கூட, வளவனூர்ப் பிராமண அக்ரகாரத்தில் பாதுகையுடன் புக்க காஷாயம் தரித்த தமிழுணர்ந்த ஆண்டியாருக்கு அதனை ப்ரம்மாலயமென அறிவுறுத்திப் பாதுகையை அக்கிரகாரப்புறத்தில் நீக்கிக் கோயில்சென்றார் என்ற கர்ண பரம்பரைக் கதை இங்கு நோக்கத்தக்கது. முருகதாஸர் வளவனுண்ட வளவனூர் விஜயஞ்செய்தபொழுது அக்கிரகாரத்திலுள்ள லக்ஷ்மீநாராயணப்பெருமாள் மீதும் ஜகந்நாதேசுவரர் மீதும் பாடிய பதிகங்கள் அச்சிலேறி வெளிவந்துள்ளன. வளவனூருக்கு வடபுறத்திலுள்ள ஸுப்ரமண்ய ஸ்தலமாகிய குமராபுரியிலுள்ள, குமரன் மீது இயற்றிய திருப்புகழ், பதிகம், மாலைகளையும், அங்குள்ள வரதராஜப்பெருமாள்மீது பாடியபதிகம், ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள விநாயகர்கள்மீது பாடிய பாடல்கள் இவைகளையும் எட்டு ப்ரதிகளாய்க், குமராபுரித் தமிழ்ப்புலவரொருவர் எம் கையின்கணிட்டனர். செல்லரித்த பாகங்களெல்லாவற்றையும் ஆராய்ந்து அந்நூல்கள் இறந்துபடாவண்ணம் அவைகளை ஒவ்வொன்றாய்ச் செந்தமிழிற் கொடுத்துப் பதித்து வருவதைச் செந்தமிழ் வல்லார்கள் ஏற்று அங்கீகரிக்குமாறு வேண்டுகின்றனம். இவர் பாடிய பாடல்களின் சந்தவின்பமும் மிகுதியும் எல்லாராலும் கொண்டாடத்தக்கதே.

சந்தம் பாடுதலிற் சிறந்தவராகிய இம்முருகதாஸருக்கு அபர அருணகிரிநாதர், வண்ணச்சரபம், சரபவித்வான், திருப்புகழ்ஸ்வாமி, தண்டபாணிப்பரதேசி என்று வேறு சில பெயர்களிட்டு அழைப்பதுண்டு. இப்பெயர்களெல்லாம் அவர் அவ்வப்போழ்து ஆங்காங்கே தம் கல்வி வல்லமையாற் பேரும் சீரும்பெற்றுத் தம் நண்பர்களிடமிருந்துபெற்ற பட்டங்களே என அறியக்கிடக்கின்றன.

'என்கனவினும், பற்பலபாடல் பகர்ந்தினிதாண்ட, முருகப்பெருமான் முழுதுணர் புலவனே' என்னும் இவரது அறுவகையிலக்க

ணச்செய்யுளடியினின்றும், இவரே தமக்கு முருகக்கடவுள் ப்ரஸன்னமென்று கூறிக்கொண்டிருக்கிறார். அறுபது பிராயம் வாழ்ந்து வந்த இவரது சரித்திரத்தைத் தாமே செய்யுள்ரூபமாக 1500 செய்யுளிற் செய்துவைத்திருப்பதாகவும் அவரது அருமைக் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ செந்திநாயகம்பிள்ளையினின்று மறிகிறோம். புதியகாலத்துப்புலவர்கள்போல் தமது சரித்திரத்தைத் தாமே எழுதிவைத்தவைகளிலிருந்து அவர் அனுபவித்த அருமையான அநுபவபூர்வமான விஷயங்களை யறியக்கூடியதாகும். தமிழுலகிற்குப் புலவர்புராணம் போன்ற அரியநூல்களியற்றியுதவிய இவர் 1898ஆண்டில் திருவாமாத்தூரிலேயே தேகவியோகமாயினர். ஸ்தூல உடம்பு அழிந்தும் அவரது புகழுடம்பு தமிழுலகத்தார் மனதில் நிலைபெற்றிருக்கும்.

வீ. சுப்பிரமண்ய ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்,
முனிஸிபல் ஹைஸ்கூல், மாயூரம்.

உ

முத்திரை.

சைவசமயிகள் அநுஷ்டிக்கு மநுஷ்டானங்கள் பலவுள. அவற்று ளொவ்வொன்றினும், இன்றியமையாதனவாக முன்னிற்பவை முத்திரைகளாம். இவை நித்தியகர்மாநுஷ்டானமுதற் சிவபூஜை ஈறாக வருகின்றமையின், அவைகளைப் பாரம்பரியமாய்க் குருமுகமாகக் கேட்டாலன்றித் தெரிந்துகொள்ள வழியில்லை. இதன் விரிவெல்லாம் ஆகமசாத்திரங்களுட் பொதிந்து கிடப்பதாற் கற்று வல்லோர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படுதலின்றித் தடுமாறுளத்தராகின்றனர். அஃதில்லதோர் குறையைப் பெரிதும் சிவபிரானிடத்தன்பும் தொண்டும் பூண்ட வந்தணரூர்ச்சந்திரமௌளி யருளுட்கொண்டு மருண்மனநீங்கிய சிதம்பரநாததேசிகரேன்பார் நிவர்த்தித்தனர். இச்

சிதம்பரநாததேசிகர் யார் என்பதும் எக்காலத்தினரென்பதும் பின்னொரு சமயம் வரைவேன்.

இச்சிறுபாமாலையி லடங்கிய விடயங்கள் குருமுகமாகக் கேட்டுத் தெளியவேண்டிய தவசியமாயினும் தெளிந்தும் சிற்சில வமயம் இடர்ப்படுதலுண்டாகையால் இதனை வெளிப்படுத்தத் துணிந்தேன். இதற்குச் சாதனமாக என்னிடமிருந்த ஒரு பிரதியைத் தவிர்த்து, திருநாகைக்காரோணத்தின் கண்ணே உபயகுல வித்வான்களாக விளங்கிய ஸ்ரீ தியாகராஜபட்டாரகர் வீட்டுப் பிரதியொன்றும் அவரது தனயன் ஸ்ரீ சோமசுந்தரதேசிகராற் கிடைக்கப்பெற்றேன். அதனில் தஞ்சைமாநகரத்துக்குச் சமீபமாகவுள்ள * உக்கடையிலிருந்த ஒரு சிறந்த வித்வான் வீட்டுப் பிரதியினின்றும் எழுதப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

இம்முத்திரைகள் பூஜாக்கிரமப்படியின்றி முறை பிறழ்ந்து காணப்படினும் எட்டுப் பிரதிகளிலுள்ளவாறே தந்தேனாகையாற் பெரியோர் மன்னிக்கவேண்டி நிற்கும்.

இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

ஆக்கினைமுதனடுவணிவிரல்செவிகண்
மூக்கினைமறைத்தல்சண்முகமுத்திரையே. க.

பிடித்தகைதற்சனிநடுவிரலின்மிசை
யடுத்துறவளைப்பதங்குசமுத்திரை. உ.

---

* இப்பொழுது இவர்கள் பூண்டியில் ஸ்ரீமாந். V. A. வாண்டையாரவர்களுடைய ஆதரவிலிருக்கின்றனர்.

(க) பிரணவம்.

(உ) க்ரியாக்ரம ஜ்யோதியில் ஸ்ரீப்ரதீகரணம் என்றவிடத்து "ததஃ விக்நம்ஹாஸநா ஆக்நேயஸ்ததேநாந்த்ராயா..........த்ராக்ஷ்" என்றும் ஆகர்ஷணம் செய்தபிறகு கும்பமுத்திரையால் ஜவேவஸத்தாவு வென்றும் சொல்லப்படுகிறது.

மண்டுநீர்பிடித்தவலக்கையையிடக்கரங்
கொண்டுமேல்வளைப்பதுகும்பமுத்திரையே. ௩.

அங்குலிநான்குமங்குட்டத்தடி
தங்குறவளைப்பதுசங்காரமுத்திரை. ௪.

சேட்டைகனிட்டைமேற்சேர்மூவிரலையு
நீட்டிவிரிப்பதுநேத்திரமுத்திரை. ௫.

இலங்குறமுக்காலிடக்கையில்வலக்கைத்
தலங்கொடுதட்டுதல்தாளமுத்திரை. ௬.

பிடித்தகைத்தற்சனிப்பெருவிரனடுவிற்
றுடித்திடத்தெறிப்பதுசோடிகாமுத்திரை. ௭.

தகைபெறுமுடியிற்றற்சனிநிமிர்த்துப்
பகர்வலஞ்சுற்றுதல்பரிகைமுத்திரையே. ௮.

நெடியகையிணைகளைநிமிர்த்தெதிர்முகமுற
வடிமுதன்முடியளவமைக்கின்மாமுத்திரை. ௯.

இருகைகள்கூட்டியிடையிடைச்சேர்த்திடும்
விரல்களிற்றற்சனிவிரல்கனிட்டைகளைப்
பார்த்திடுமத்திமையனுமிகைகளினுற்
சேர்த்துறப்பிடிப்பதுதேனுமுத்திரை. ௧௦.

பிடித்தகைதற்சனிபிறங்கியமத்திமை
விடுத்திடுவதுகோவிடாணமுத்திரையே. ௧௧.

கருதிணைப்பெருவிரல்கனிட்டிகைமுதல்
விரனுனிதொடுவதுவிற்புரமுத்திரை. ௧௨.

---

(௪) ஸம்ஹாரம்.

(௭) கைந்நொடித்தல்.

(௯) மகாமுத்திரையுடன் இதனை மயங்கற்க.

(௧௧) கோவிஷாண - [illegible] சூரியபூஜை.

(௧௨.) விஸ்புரமென்பர். [illegible] என்பர் சூரியபூஜையில்.

அஞ்சலிதன்னுளணிவிரலிரண்டினும்
விஞ்சியவங்குட்டமேவிலாவாகனம். கங.

மேவுமஞ்சலிதனைவிரித்ததோமுகமுறத்
தாபனஞ்செய்வதுதாபனமுத்திரை. கச.

பெருவிரலுயர்ந்திடப்பிடித்தகைமுட்டிகள்
சருவுறவிளைந்திடிற்சன்னிதானமதாம். கரு.

அன்னசன்னிதானத்தகமுறப்பெருவிர
றன்னைமுட்டியினிறுத்தல்சன்னிரோதனம். கசு.

பிணித்தகைவிரித்துப்பெருவிரலினைநடுப்
பணித்திடப்பிடிப்பதுபிரும்மமுத்திரையே. கஎ.

பிரும்மமுத்திரைதருபாணியினடு
விரற்பொரத்தொடுவதுவிம்பமுத்திரையே. கஅ.

கைவிரல்குவித்ததிற்கனிட்டைதற்சனியெனு
மெய்விரனீட்டன்மிருகமுத்திரையே. ககூ.

பிடித்திடுவலக்கைபிறங்குதற்சனிநிமிர்த்
திடக்கையிலடித்திடுமெனிற்றிராசனியே. உ0.

பெருவிரலிரண்டும்பிணைந்திடநிமிர்த்த
கரமிரண்டுறினமக்காரமுத்திரையே. உக.

முரசுசிநான்கின்முட்டியினிமிர்த்த
தர்ச்சனிநுதியாற்றட்டுதனமுர்தமாம். உஉ.

(கஅ) விம்பமுத்ரா:.

(ககூ) மான்முத்திரையென்பர்.

(உ0) சூரியபூஜையில் போகாங்கத்தில் "நேத்ரயோர்மத்யவிஷாண முத்ராஸ்த்ரஸ்வஸ்த்ராவஸ்தீ முத்ராம்ச ப்ரதர்ஶயேத்" என்பர்.

சிறுவிரனீட்டிச்சிறந்ததர்ச்சனியுட
னுறுபெருவிரளுேடிஞற்பவமுத்திரை. உ௩.

இருகைமுட்டியினிமிர்த்திட்டதர்ச்சனிகட்
கேகினபெருவிரற்றெரிக்கிஞராசம். உ௪.

அம்மலர்சாத்தற்கணுமிகைபெருவிரற்
செம்மையிற்செறிவது திவ்வியமுத்திரை. உ௫.

ஓரித்திடுகரமுறநிமிர்த்தங்குலி
பாரித்திணைவதுபதாகைமுத்திரையே. உ௬.

தூயபதாகைச்சொற்பெருவிரனுதி
யாயதர்ச்சனிவலத்தடிதொடிற்சங்கம். உ௭.

உறுமிருகையாலுள்ளுதற்குவித்துச்
சிறுவிரன்முதலாய்ச்செறிந்தநால்விரலினுந்
துன்னியபெருவிரளுேட்டுறநிமிர்த்திடிற்
கைந்நிகழ்காளகன்னிகைமுத்திரை. உ௮.

அடுத்திடுமிடக்கையிலங்குட்டமதனைப்
பிடித்திடுவலக்கைப்பெருவிரனிமிர்த்தாங்
கசைவரவிடக்கையிலங்குலிகளைவளைத்
திசைவுறப்பிடிப்பதிலிங்கமுத்திரையதாம். உ௯.

தன்னுட்கோத்தகைத்தர்ச்சனிப்பெருவிரன்
மன்னியநடுவிரன்மணிச்சிறுவிரல்களைப்
பாங்குறப்பிடித்தபினணிவிரலினைநடுப்
பாங்குறநிமிர்ப்பதுபஞ்சமுகமே. ௩௰.

இருகையங்குலிகளையெதிர்முகத்துள்ளுறச்
செருகியபின்பிணைச்செங்கைகள்கூட்டி
நீட்டுதற்சனிகளினிமிர்த்துறப்பெருவிரன்
மூட்டிடின்மனேரதமுத்திரையாகும். ௩௪.

(உ௩) சூரியனுக்கு நிவேதனத்தில் வருவது.
(உ௯) பின்வரும் பஞ்சமுகியுடன் மயங்கற்க.

பெறுகரங்கோத்தபின்பெருவிரனடுவிரற்
சிறுவிரனிமிர்ப்பது திரிசூலமுத்திரை. ௩௨.

திரிசூலந்தனிற்செறித்ததற்சனியினை
மருவணுமிகைவளைத்திடின்மகாமுத்திரை. ௩௩.

முற்றும்.

இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர், சோமசுந்தர தேசிகன்.

௨

ஆசாரவிளக்கம்.

("செந்தமிழ்" ௯-ம் தொகுதி ௬௦௦-பக்கத்தொடர்ச்சி.)

"பிறகு, அபூ ஓபீடாவுக்கும் காலிப் ஓமாருக்கும் நடந்த உத்தரப் பிரத்யுத்தரங்களின் விஷயத்தை ஜனங்களின் திருப்தியின் பொருட்டு அபூமூஸா எடுத்துச்சொன்னார்."

"இதே விஷயத்தை இபுவே அஸிஸ்ர் ஜஸ்ரி (Ibue Asisr Jazri) என்பவர் தம்முடைய "டபீக்-இ-கமீல் (Tabikh-i-kamil)" என்னுங் கிரந்தத்தில், 6-ம் புத்தகம், 275-ம் பக்கத்தில் விவரித்திருக்கிறார்."

"இதுவரையில் எடுத்துக்காட்டிய அத்தாட்சிகளைப் பின்வரும் பல காரணங்களினால் நாம் நம்பவேண்டியிருக்கிறது":—

(1) இந்தச் சங்கதிகள் யாவும் ஜனங்கள் ஆசரித்து நடந்தவைகளே யன்றி, நடவடிக்கையிற் கொண்டுவராத வெறும் கொள்கைகளல்ல.

(2) இந்த அத்தாட்சி மகம்மதிய தேசத்தில் ஒரு பாகத்துக்கு மாத்திரம் சம்பந்தமானதன்று; மகம்மதுவின் கூட்டாளிகள் நிறைந்திருந்த மூன்று முக்கியமான ஸ்தலங்களில் நடந்தவிஷயங்கள்;

அவையாவன:—ஸிரியா, இராக், ஹெட்ஜாஸ். அவை ஹெட்ஜாஸில் உற்பத்தியாகி, ஸிரியாவிற் செலாவணிக்குவந்து இராக்கில் நடத்தப் பட்டன; அன்றியும், அவை இரண்டொருவருடைய காரியங்களல்ல, எல்லாருக்கும் பொதுவானவை.

"மகம்மது உயிர்த்திருந்தகாலத்திலும் அபாயத்திற்கிடமான அநாரோக்கியப் பிரதேசங்களையொழித்து மனிதர் க்ஷேமத்தை நாட வேண்டுமென்று மகம்மது கட்டளையிட்டதற்கு நேரான அத்தாட்சி யிருக்கிறது. உதாரணமாக, புகாரி (Bukhari) யில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது":—

"அகால் (Akal), அரீனு (Arina) என்னுமிடங்களிலிருந்து சிலர் மகம்மதுவினிடத்திற்குப்போய் இஸ்லாம் மதத்தைத் தழுவி னார்கள். அவர்கள் கிருஷி செய்வதற்குத் தங்களுக்குப் பூமிகளில் லாததனால் ஒட்டகத்தின் பாலைக்குடித்து ஜீவிப்பதாகவும், மெடினு (Medina) தேசம் தங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லையென்றும் மகம் மதுவினிடத்திற் சொன்னார்கள். அதன்மீது மகம்மதுவானவர் அவர் களை மெடினுவைவிட்டு வெளிப்புலங்களிற் குடியேறச் சொன்னார்." இந்தவிஷயத்தை அபூதாவூதும் (Abu Davood) எழுதிவைத்திருக் கிறார்.—(புகாரி, புத் 10, பக்கம் 159).

"இப்படியே குஷ்டரோகிகளுடன் சகவாசஞ்செய்யக்கூடா தென்று குறித்துச்சொல்லப்பட்டிருக்கிறதென்பது பின்வரும் ஐதிகங் களினால் வெளியாகும்:—

(1) ஸகிப் (Sagif) பிலுள்ள வர்த்தகக்கூட்டத்தில் ஒரு குஷ்ட ரோகி இருந்தான். அவன் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினமை யின் இனித் தன்வீட்டுக்குப் போய்ச்சேரலாமென்று அரேபியா தேசத்து தீர்க்கதரிசியான மகம்மது அவனுக்குச் சொல்லியனுப் பினார்.

(2) குஷ்டரோகியைக் கண்டவிடத்துச் சிங்கத்தைக்கண்டு ஓடு வதுபோல அவனைவிட்டு ஓடிப்போ.

(3) குஷ்டரோகியினிடத்திற் பேசும்போது உனக்கும் அவ னுக்கும் இடையில் இரண்டு ஈட்டி தூரம் இருக்கட்டும்.

(4) குஷ்டரோகியை உற்றுப்பாராதே.

(5) ஆரோக்கியமாக இருப்பவர்கள் நோயாளிகளண்டைபோக வேண்டாமென்று தேவதூதன் (மகம்மது) சொன்னார்.

"இவைபோன்ற சாஸனங்களனேகம் எடுத்துக்காட்டலாம். இவைகளினால், அநாரோக்கியஸ்தலங்களைவிட்டு ஆரோக்கியஸ்தலங்களுக்குச் செல்லவேண்டியது மகம்மதியர்களான நாமெல்லோரும் அவசியமாகச் செய்யவேண்டிய கடமையாக இருக்கிறது." என்று அலிகர் நகரத்து மகம்மதியக் கலாசாலை வித்வான் முன்ஷியானவர் சொல்லுகிறார். இதுவுமன்றி, மகம்மது ஜஹிருதீன் மேக்கய், பி. ஏ. (Muhamed Zahiruddin Meccai, B. A.) எழுதிய சிறு புத்தகமொன்றில் பின்வரும் வாக்கியங்களை எடுத்து உதகரித்திருக்கிறார்:—

"கொரான் என்னும் திவ்விய கிரந்தத்தில் கடவுள் 'வலாதுல்கு பி இடிகும் இலத் தஹலு கடி' (Vala Tulku Bi Idikum Ilat Tahlu Kati உயிரை ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ளாதேயுங்கள்) என்று கட்டளை யிட்டிருக்கிறார். இதனால், எந்த இடத்திலாவது உயிர்ச்சேதத்திற்கு ஆஸ்பதமான சந்தர்ப்பங்களிருந்தால், அங்கே இருப்பவர்கள் அதனால் மரித்துக்கொண்டிருந்தால், அந்த இடத்தைவிட்டொழிக்கவேண்டுமென்பது கடவுளின் கட்டளையெனத் தெளிவாகின்றது.

"ஒட்டகத்தைக் கயிற்றினாற் கட்டு, பிறகு அது பத்திரமாக இருப்பதற்குக் கடவுளை வேண்டு" என்று ஹஸ்ரத் மௌலானா ரூம் (Hazrath Moulana Room) என்பவர் தம்முடைய மஸுவாவி (Masuavi) யிற் சொல்லியிருப்பதாகத் தீர்க்கதரிசியான மகம்மது கூறினார். அதேமாதிரியாக, வியாதியை விளைவிக்கக் கூடிய காரணங்களைத் தவிர்ப்பதற்கு மனிதர் பிரயத்தனப்படவேண்டும். அதன் மீது விதியின்படி நடக்கட்டுமென்னலாம். ஆதலின், வியாதியைத் தவிர்ப்பதற்கும் அது பரவுவதைத் தடுப்பதற்கும் நாம் பிரயத்தனப்படாமல் மற்றவர்கள் பிரயத்தனம் செய்யவும் இடங்கொடாமல், எல்

லாம் விதியின்படியாகட்டு மென்றிருந்தால், கடவுளும் அவருடைய தூதரும் இட்ட கட்டளைகளை மீறி நடப்பவர்களாவோம்."

முற்காலத்துக் கீழ்நாட்டுச் சாஸ்திரக்காரர்கள் ஆரோக்கிய முறைகளைப்பற்றிச் சொல்லிய முக்கியாமிசங்களை மாத்திரம் எடுத்துச் சொல்வதாய் இச்சிறு புத்தகத்தின் ஆரம்பத்திற் சொன்னேன். இக்காலத்துச் சாஸ்திரமுறைப்படி யேற்பட்டிருக்கும் ஆரோக்கிய விதிகளைப் பூர்வத்து ஆரியர்களும் மகம்மதியர்களும் தெரிந்திருந்தார்களென்று காட்டுவதற்கு வேண்டியமட்டும் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னேன். ஆகவே, ஆரோக்கியமுறையானது மேற்றிசையாருடைய அபிமானக்கொள்கையன்று, அவர்களுடைய அபிமானக்கொள்கை யெனக் கருதுவது பிசகு. அது நிற்க, மகம்மதியரும் இந்துக்களும் ஆரோக்கிய சாஸ்திரத்தைக் கவனியாமலும் அந்த விதிகளை ஆசரியாமலும் அச்சாஸ்திரத்தைப் பாழடையச் செய்ததும், அந்த விதிகளைப் புதுப்பித்து இக்காலத்தில் ஆரோக்கிய சாதனத்திற்காகச் சட்டமேற்படுத்தினால், அவை தமக்கனுகூலமான பழைய ஆசாரமெனத் தெரிந்துகொள்ளாதிருப்பதும் பெருங்குற்றமெனச் சொல்வேன். கொள்ளைநோய் நம்மைச் சூழ்ந்திருக்கும் இத்தருணத்தில் "ஆரோக்கியமே பாக்கியம்" என்பதை நாம் மறக்கக்கூடாது. தத்தம் வீடுகளில் ஆரோக்கிய விதியை யநுசரிப்பவர்களும் ஊர் நலத்தை நாடி அதைப் பஹிரங்கமாக எடுத்தோதுகிறவர்களும் ஆயுராரோக்கிய ஐசுவரியங்களை யனுபவிப்பார்கள். ஆரோக்கிய விதியை மேற்கொள்ளாதவர்கள் திரவிய நஷ்டத்தையும் உயிர்ச்சேதத்தையும் அடைவார்கள். இது திண்ணமென்பது தேச சரித்திரங்களினால் ஏற்பட்ட விஷயம்.

ஆரோக்கியமஸ்து.

கா்னல், உ. ஜி. கிங்கு, சி. ஐ. இ., ஐ. எம். எஸ்,

சானிடரி கமிஷனர்.

S21

உ

கடவுள் துணை.

(ஒரு நிருபவிடயம்.)

மகா-ா-ா-ஸ்ரீ.

செந்தமிழ்ப் பத்திராதிபரவர்களுக்கு

(ஐயா)

அடியிற்கண்ட விஷயத்தைத் தங்களுடைய பத்திரிகையிற் பிரசித்தஞ்செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முன்னூல் முதலிய பன்னூல்களினும் பயின்று அவைகளு ளடங்கிய பொருளை யுய்த்துணர்ந்து எப்பொருட்கு மிறையாகிய கட வுளி னருட்குரிய தவம், தானம், தர்மம், வாய்மை, தூய்மை, மேன் மை, பொறை, சாந்தம், அடக்கம், அன்பு, அறிவு, தேற்றம் முதலிய நற்குணவொழுக்கத்திற் பற்றும், (ஊருணிநீர் நிறைந்தற்றே உலக வாம் பேரறிவாளன் திரு என்றபடி) திரிகரணங்களையும் பொதுநன் மையின் பொருட்டே செலுத்துந் தன்மையும், ஸர்வவ்யாபக சை தன்ய மென்னும்வஸ்து நிச்சயத்தினபரோட்ச ஞானமும் பொருந்தி யும் உலகத்தோடொத்து வாழு மான்மஞ்ஞானிகளையே ஆன்றோ ரென்ப. அன்னாரின் காட்சிதவத்தினர்க்கன்றி யேனையோர்க்குப் புலப் படாவெனற் குதாரணமாக,

நலமுறுமோர்சிவஞானியில்லில்வாழ்
நிலையறமாயினும்நீத்துநிற்குமோர்
தலையறமாயினுந்தரித்துஞாலமேல்
இலைமறைகாயென விருக்குமென்பவே.

என்னும் பிரபுலிங்கலீலாதி நூலையும் எனது பேதைமையையும் உன்னுந் தொறுமுண்டாயவெய்துயிர்ப்படங்கிக் களிக்குமாறு தரிசிக்க நாடத்தக்க அவ்வருங்பொருளுட் சிறந்தது மதுரைத் தமிழ்ச்சங் கத்து பிரஸிடெண்டுப்ரம்மஸ்ரீ P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் தா

னென்று கரதலாமலகம்போ லெனக்குக் கருணையுடன்காட்டி யுதவிய மேற்குறித்த தமிழ்ச்சங்கத்தோர் தமிழ்ப்பத்திரிகாரத்னத்தை யுப தேச சற்குருவாய்க் கொண்டுவணங்கி வாழ்த்திப்போற்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுளேன்.

(அதாவது) மதுராபுரிக் கரசியாயெழுந்தருளிய அங்கயற்கண் ணம்பிகையார் துணைத்தாளின்மீது பாமாலைசாத்தித்துதிக்க வடியே னுக்குற்ற விருப்பானது (சொல்லுவேனெனுமாசையென் சொல்வழி கேளா என்றதொப்ப) எனதுரைக்கடங்காமையால் எனது புல்லறிவுக் கியைந்த தமிழ்மொழியைத் தொடுத்துக் கூடலந்தாதியெனப் பெய ரிட்டு வெளியிடலானேன்.

(அது) கற்றதூஉமின்றிக்கணக்காயர்பாடத்தாற்
பெற்றதாம்பேதையோர்சூத்திரம்—மற்றதனை
நல்லாரிடைப்புக்குநாணுமற்சொல்லித்தம்
புல்லறிவுகாட்டிவிடும்.

எனற்கேற்பினும் மதுரைத் திருஞானஸம்பந்த ஸ்வாமிகளாதீன வித்வானும் எனதுயிர்த்துணையுமாகிய ஸ்ரீமான் சுப்பிரமணிய தேசிக ரவர்கள் உரையாசிரியரும், மதுரை மாணவகர் செந்தமிழ்ச் சங்கத்து அக்ராஸனாதிபதியும் எனது நட்பாளருமாகிய ப்ரம்மஸ்ரீ கோபால கிருஷ்ணய்யரவர்களாதியோர் சாற்றுக்கவி தாக்களுமாகப் பெற்றமை யானும், மற்றும் (பிரபோத சந்திரோதயம்.

பருவம்நோக்கிவான்மழைபொழிந்திடுவதும்பகலோன்
இருள்துரப்பதுந்தண்புனல்நதிகள்மற்றெவையும்
பெருகுகிற்பதுமொப்பிலாநற்குணப்பெரியோர்
அருள்சுரப்பதுந்தமக்கொருபொருள்குறித்தன்றே.

என்றிருத்தலால்) பெரியோரருளைப்பற்றியுந் துணிவுற்றேன். அவ் வந்தாதிப் பிரபந்தத்தை ஐயரவர்க ளன்புகூர்ந்து திருவுள்ளத்துவந் தேற்றுப் புகழப்பெற்றமையால், அத்துணிவும்.

வந்தாழிநீருண்டமுதாக்கிமேகம்வழங்குவபோல்
இந்தார்குணப்பெரியோரடியேனிங்கிசைத்தபுன்சொல்

அந்தாதியையுளங்கொண்டினிதாக்கியளித்திடுவார்
செந்தாமரைச்செழுங்கூடற்பிராட்டிக்குத்தித்திக்கவே.

என்ற அவையடக்கச் செய்யுளும் பயன்பெற்றதாயிற் றென்பதைக் கொண்டு யானடையுங் களிப்புக்கு அளவுகண்டிலேன்.

இவ்வாறுபகுத்துச் சுவையுணரும் பண்பானது

(காவ்யாலங்கரணஞ்ஞுமேவகவிதாகன்யாவருணீதேஸ்வயம்.

என்றற்கியையயக்) காவ்யநாடகாலங்கார கவித்வரஸிகசிகாமணியாகிய நம் சுப்பிரமணிய ஐயரவர்களினுத்தமகுணப் பெருமைக்கியல்பன்றோ மேலும், கம்பரிராமாயணம், கிட்கிந்தாகாண்டம் மாராமப்படலம் 20-வது பாட்டில்.

இல்லாதவுலகத்தெங்குமிங்கிவனிசைகள்கூரக்
கல்லாதகலையும்வேதக்கடலுமேயென்னுங்காட்சி

என்றவிடத்து அனுமார், கல்லாதகலையானது, உலகத்தெங்கும் இல்லாத என்றோர்வழிபொருள் கொண்டிருப்பதாக வெளியாகிறது. ஆயினும், அனுமார்கலைமுற்றுந்தேர்ந்துளாரென்பதற்கு வேதக்கடலென்பதே சாலுமானது பற்றியும், இரண்டும்மையுற்றிருப்பதாலும், கல்லாதகலைவேறு - கற்குங்கலைவேறு எனக்கண்டோம். அஃதேல், கல்லாதகலை-ஞானமும் கற்குங்கலை-வேதாதியுமாகவேண்டும். இதற்கு (மேற்கண்ட படலம் 60-வது பாட்டில் கேட்டுணர்கல்வியோடு ஞானமுங் கிடைத்ததொத்தார். என்பதும், திருவிளையாடல் ஏன்றவேந்தனிலாக்குடி யீட்டமும் என்றகவியில்,

ஆன்றஞானமிலாதவர்கல்வியுமானதே
சான்றகீரனிலாதவைகூடியசங்கமே.

என்பதும் வெள்ளிடைமலையொப்பச்) சான்றாகவிளங்குவதை மேற்குறித்த 20-வது பாட்டுக்குமுன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களும் ஆதரிக்கின்றன. ஆகவே இவன், இன்னான், இங்கு, இவ்வுலகத் திருப்பினும், இல்லாதவுலகத்தெங்கும். (இவன்) இராதபாலோக

முழுதும் இசைகள்கூர கீர்த்திகள் பரவுமாறு வேதக்கடலும் மிக்க கல்வித்தேர்ச்சியும், கல்லாதகலையும், ஞானமும், சாரப்பெற்றுளான், என்னுங்காட்சி எனப்பொருள் கொள்ளவேண்டுமென்ப தெனது கருத்து.

இவ்வண்ணம் நமது ஸ்ரீ P. S. S. ஐயரவர்களினிதையத்திற் கல்வி முளைத்து உணர்ச்சிக்கிளைதழைத்தோங்கிச் சொல்லரும்பிப் பொருள்பூத்துக் கவிமுதிர்ந்து ஞானமாம்பழங்கனிந்து பெருகுஞ் சிதானந்தத்தேனில் தோய்ந்து பரிமளித்துத் தடாதகைப் பிராட்டியாரி னுவப்பமையப்பெற்ற வெனது அந்தாதிப்பாமாலைப் பிரபந்தமும். மதுரைச்சங்கம் பொங்கத் தங்குந் துங்கத் தமிழ்ப்பத்திரிகையும், ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலிய நண்பினரும், இசை பெருகிவாழும் வண்ணம் அருள்புரிதற்குகந்த அங்கயற்கண்ணரசியார் திருவடிக்கமலங்களைச் சிரசின்மேற்கொண்டு பிரார்த்திக்கிறேன்.

மாமணக்கும்மதுரைத்தமிழ்ச்சங்கத்துவாழ்க்கையுற்றுக்
காமணக்கும்வையைநீர்வளஞ்சூழ்ந்துகவின்கமலப்
பூமணக்குங்கயற்கண்ணம்பிகைபதப்பொற்படைந்தென்
பாமணக்குஞ்சுப்பிரமணிக்காவலன்பார்வைகொண்டே.

தவமணியும்பரும்பரவு கூடலஞ்சேற்கண்ணிமலர்த்
தாளைப்போற்றிச்
சிவமணியுங்கருத்துடையேன்றொடுத்ததமிழந்தாதி
சிறக்கச்செய்தான்
திவமணிநேர்தமிழ்ச்சங்கப்ரஸிடெண்டுபியெஸெஸெனுஞ்
சீர்த்தியுற்ற
நவமணிசூழாமணிசிந்தாமணிசுப்பிரமணியாம்
நாவலோனே.

எம். எஸ். பிச்சுவய்யன்.

525

உ

புத்தக வரவு.

மோஹனதாஸ்காந்தியேன்னும் தென்னுபிரிக்கா இந்தியத்தலைவர் சரித்திரம்:— இது ஸ்ரீமத்-ஆர். நாராயணஸ்வாமி ஐயரவர்களாலியற்றப் பெற்றது. இச்சரித்திரத்தால் மோஹனதாஸ் காந்தியென்பவர் தென்னுபிரிக்காவிலுள்ள இந்தியர்களின் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக அரும்பாடுபட்டு தாம் பல கஷ்ட நஷ்டங்களடைந்தும் விடாமுயற்சி கொண்ட பெருமை வாய்ந்தவரென்பது விளங்குகின்றது. இப் புத்தகத்தில் மோஹனதாஸ் காந்தியின் படமும், காந்தியின் முயற்சியைப் பற்றிச் சென்னைக் கவர்னராயிருந்த ஆம்தில் பிரபு அவர்கள்சொல்லிய அபிப்பிராயமும், அவரது படமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆர். நாராயணஸ்வாமி ஐயரவர்கள், 44, அர்மெனியன் தெரு, சென்னை. என்றவிலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

கரும்பலகைச் சித்திரம்:—இயற்கையும் செயற்கையுமாகிய வுருவுடைப்பொருள்களை யுள்ளவாறு காட்டுதற்குரிய சிற்பவகையாகிய சித்திரத்தொழிலைச் சிறுவர்களுக்குக் கற்பித்தற்குபயோகமாக இப்புத்தகம் சைதாப்பேட்டை கெவர்ன்மெண்டு போதனுபாடசாலையுபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ அ. சுப்பிரமணிய ஐயரவர்களால் இயற்றப்பட்டு வேண்டுஞ் சீர்திருத்தத்துடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பெற்றிருக்கிறது. இதிற் பலவகைப்பட்ட சித்திராப்பியாசங்களுக்கும் முப்பத்திரண்டுவகைப்படங்களமைக்கப்பெற்றிருப்பதோடு அவற்றை அப்பியசிக்கும் முறை முதலிய விவரணங்களும் தெளிவாய்த் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் மாணவர்களுக்குச் சித்திராப்பியாசஞ்செய்விக்கு முபாத்தியாயரோவ்வொருவருக்கும் மிகவும் பயன்படத்தக்கதே. இதன்விலை அணா 12. வேண்டுவோர் ஜனரல் சப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. என்றவிலாசத்திற் கெழுதிப்பெறலாம்.

526

மகுடதாரணவைபவவெண்பா:—இது மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் மகுடதாரணவைபவத்தைப் பற்றி ஸ்ரீ வானமாமலைமடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேர் ஸ்ரீமத்- அனந்தகிருஷ்ணையங்காரவர்களாலியற்றப்பட்ட நூற்றுமுப்பத்துமூன்று வெண்பாவும், வாழ்த்துமுடையது. இது மஹாமஹோபாத்தியாய பிர்ம்மஸ்ரீ- வெ. சாமிநாதையரவர்கள் முதலிய பண்டிதர்களால் நன்குமதிக்கப்பெற்றிருக்கிறது. இது பாடியதற்காக ஐயங்காரவர்கள் காரனேஷன் கமிட்டியாரால் நூறுரூபாய் பெறுமான தங்கச் சங்கிலியொன்றும், ஸ்ரீ வானமாமலை ஸ்வாமிசந்நிதியிலிருந்து உயர்தரமான ஒரு சால்வையும் பரிசுபெற்றிருப்பதாகக்கேட்டு மிகத் திருப்தியடைகிறோம்.

☞ மேற்கண்ட புத்தகங்கள் பாண்டியன் புத்தகசாலையில் வழக்கப்படி சேர்க்கப்பட்டன.

ப—ர்.

உ

பிழைதிருத்தம்

செந்தமிழ் பத்தாம்தொகுதி எட்டாம் பகுதி நசுஙு-ம் பக்கம் சுதர்மகலாவதீயம் என்ற தலைப்பின்கீழ் உஎ-வது வரியில் தொன்மொழி என்றிருப்பதைத் தென்மொழியென்றும், ஷை பகுதி நஅடு-ம் பக்கம் கஎ-வது வரியிற் பொலிவில் என்றிருப்பதைப் பொருவில் என்றுந் திருத்திக்கொள்க,

ப—ர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

1912-வருஷம் ஜூன்மீ 1௳ முதல் 30௳ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
கானாடுகாத்தான் மகா-ஸ-ஸ-ஸ்ரீ சா. ரூம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடமிருந்து பரீதாபி-வருஷம் வைகாசிமீ த்துக்குறிய மாதசந்தா வரவு ரூ ...	50	0	0	சங்கச் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ...	369	6	5
1912-ம்வருஷம் ஜூன்மாதத்துக்குரிய புதுக்கோட்டைசமஸ்தானம் மாதச்சந்தா வரவு ...	50	0	0	கலாசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கிய வகையிற் செலவு ...	0	14	6
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	49	0	0	பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0—6—0			
பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவரவு 147—14—6				ஷை ஆபீசு கண்டின்ஜென்ஸிச் செலவு 21—7—10			
சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 56—10—6				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	21	13	10
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	204	9	0	பிரிண்டிங் ஆபீஸ் ஸ்டேஷனரிச்செலவு 31-2-0			
பைண்டிங் ஆபீசு வரவு ... 38—8—0				ஷை ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 5—14—7			

S27

சங்கம்ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு ...	3—12—0				ஷெ ஆபீஸ் கண்டின்ஜன்விச்செலவு மாகரூ	2—0—6			
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...		42	4	0	ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		39	1	1
புத்தக விற்பனை வரவு ரூ ...		24	8	0	போஸ்டேஜ் வகையிற் செலவு ...		23	0	0
சங்கம் காலிநிலம் மாக்கடை வாடகை நாளது பரீதாபி-வரு வைகாசிமீ" த்துக்கு வரவு ...	55— 0—0				சங்கம் ஆபீஸ் இருக்கிற கட்டடத்துக்கு சென்ற மேமீ" த்துக்கு செல்லாக்கிய வாடகைரூ	25—0—0			
விளம்பர வகையிற் சார்ஜ் வரவு	12— 2—0				கலாசாலை யிருக்கிற கட்டடத்துக்கு சென்ற பிப்பிரவரிமீ" த்துக்கு செல்லாக்கிய வாடகை ரூ	18—0—0			
பிரின்டிங் செய்தனுப்பிய வகையில் போஸ்டேஜ் வரவு ரூ	0—3—0				ஆகமேற்காட்டிய விபரப்படி செலவு ரூ...		43	0	0
ஸ்டோர் ரூமிலிருந்த சள்ளிப்பெட்டிகளை விற்றவகையில் வரவுரூ	1—0—0								
ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ ...		68	5	0	லைபிரேரி உபயோகத்துக்காக புத்தகங்கள் வாங்கிய வகையிற் செலவு ரூ ...		0	14	0
					ரசீதுலேபிள், வண்டிவாடகை இன்சூர் வகையரு செலவு ரூ	0—12—6			
					ஆபீஸ் ஸ்டேஷனரி கண்டின்ஜன்ஸி பவுன்டன் பென் இங்கு வகையரு உள்பட செலவு ரூ	7— 2—9			

				பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் ரூ ... 56—10-6			
				ஷை ஆபீஸ் பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் வகைக்குச் செல் ரூ 3—12—0			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	68	5	9
				லேட் பிரசிடெண்டு டிரஸ்டியவர்களிடமிருந்து கடனுக வரவு வந்திருந்த ரூ 1000த்தில் 1911ஹு நவம்பர்மீ த்தில் செல்லாக்கியது ரூ 200 போக நாளது ஜுன்மீ த்தில் ஷை கடனுக்காக செல்லாக்கியது ரூ ...	200	0	0
ஆக மொத்தம் ரூ	489	4	0				
				ஆகமொத்தம்செலவு	766	7	7
சென்றமேமீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	803	15	2	போகபாக்கியிருப்பு	* 526	11	7
ஆக மொத்தம் வரவு ...	1293	3	2	ஆக மொத்தம் ...	1293	3	2
ஆக மொத்தம் ரூ ...	1293	3	2	ஆக மொத்தம் ...	1293	3	2

*As per P. B. No. 263 of Madura Co-oprative Stores-Rs. 510—0-0
With the Manager Rs. 16-11-7
Rs. 526-11-7

T. A. SUBBUVENKATARAMA IYER,
Manager.
12—7—12.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
17—7—12. *Auditor.*

530

உ

அபிதானசிந்தாமணி.

இதுவரை தமிழில் வெளிவராத "அபிதானசிந்தாமணி" என்னும் அரிய பெயரகராதிப் புத்தகமானது மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் பதிப்பிக்கப்பெற்று முடிவடைந்திப்பொழுது கலிகோ பைண்டுசெய்து விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைக்கப்பெற்றிருக்கிறது. இதில் வடமொழி தென்மொழி நூல்களிலும், உலக வழக்கிலும் வழங்கிவரும் பிரசித்திபெற்ற தேவர், முனிவர், அரசர், புலவர் முதலிய பலர்களுடைய பெயரும், அவர்கள் சரித்திரச்சுருக்கமும், நதி, மலை, கடல், தேசம், நகரம் முதலிய பலவற்றின் பெயரும், அவற்றின் விவரணங்கள் பலவுமெழுதப்பெற்றிருக்கின்றன. ராயல் 8-பக்கம் கொண்ட பாரம் 131 உள்ளது. நல்லகாகிதத்திற் றெளிவான எழுத்திற் பதிப்பிக்கப்பெற்றது. இதன் விலை ரூ 7 (ஏழு) வேண்டுவோர் மதுரைத் தமிழ்ச்சங்கம் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

T. A. SUBBUVENKATARAMA IYER,

Manager.

531

குந்தல கௌமதி.

என்னும் கூந்தலை வளர்க்கும் தைலத்தை இடைவிடாமல் உபயோகிப்பதினால் மயிர்க்கு ஏற்படக்கூடிய தொந்தரவுகள் நீங்கும். இது மயிருடன் சேர்ந்த கபாலத்தோலை ஜிலுஜிலுப்பாகவும், குளிர்ச்சியாகவும் செய்கிறது. மயிர்க்கால்களுக்கு ஊக்கமும் வளரும்சக்தியையும் ஏற்படுத்தி மயிரை மிகவும் நல்ல ஸ்திதியில் வைக்கிறது.

பெரிய அளவு புட்டி	1-க்கு	12-அணா	தபால் சார்ஜ்	உள்பட	ரூ	1- 3-0
௸	௸	3-க்கு ரூ 2	௸	௸	ரூ	2-11-0

வேண்டுவோர், சென்னை ஏஜண்டுகளாகிய, எம். ஷாஹீயர்தயால் அண்டு கம்பேனி, 144—5, சினபெஸார் ரோட்டு, சென்னைக்கு எழுதிக்கொள்ள வேண்டியது.

Kaviraj. R. C. Sen L. M. S.

கவிராஜ் ஆர். ஸி. ஸென். எல். எம். எஸ்.

216 Cornvallis Street,

காரன்வாலீஸ் தெரு,

CALCUTTA.

கல்கத்தா.

532

கொனோசன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

கைகண்ட மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

கொனோசன் சீக்கிரம் எரிச்சலுண்டாவதையும் கோரே நிமிர்ச்சியையும் தணிக்கிறது. இது தான் மிகவும் மேலான மருந்து. இது இரைக்குடலைத் தொந்தரவுசெய்யாமலும், அருவருப்பையும் வாந்தியையும் உண்டாக்க மாட்டாதுந் தவிர. குண்டிக்காய்க்குறியில் எரிச்சலுமுண்டுபண்ணாது. அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. **15**-மணி நேரங்களில் சொஸ்தமாகிறது.

HOLZ MULLER & SCHMIDT,

7, Colootola Street,

CALCUTTA.

Stocked by:—

T. V. GEORGE & CO.,

CHEMISTS,

MADURA.

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன். [6]

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

என் ஆயுர்வேத ஔஷதசாலையை பறங்கிபேட்டையிலிருந்து

ஸ்திரமாக தஞ்சாவூருக்கு மாற்றியாய்விட்டது.

24. **இரக்ஷாமிருதம்:**—தாவரவர்க்கத்தைச்சார்ந்த அநேகஅபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி, தேயிலைச்குப்பதிலாக உபயோகப் படுத்துவற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியானபானமாகும். அறைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலறா முதலிய காலங்களில் ஷை சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலைசேர்க்காமல், சமயத்திற்குத் தக்கபடி உபயோகிக்க, ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவது மன்னியில், நோய்வாராமல் காக்கும். பித்தவாயு, காசம் க்ஷயம், அஜீர்ணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளை போக்கும். இரத்தத்தை சுத்திசெய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மது மூத்திரம், அதி மூத்திர ரோகிகளுக்கும், அருமையானவஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ளதித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து, மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தை சாந்திசெய்யும். மூளையை பலப்படுத்தி, ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், பகைக்கத்தக்க குணமுள்ள காபி, தேயிலையை விட்டுவிட்டு, இதைஉபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1—க்கு விலை அணா 6. வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகமாகும்.

25. **சர்பத்துகள்:**—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜாபுஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம், இஞ்சி சர்பத்துகள், ஷை சர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடா வாட்டரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்த பழசர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுங் கூடிய சர்பத்தாகும். அரை அவுன்ஸ், சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீஸாவிலுள்ள சர்பத்து 50சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்ஸ் சீசா 1-க்கு விலை அணா-8, வி. பி. சிலவுகள் 1-முதல் 3-சீஸாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

534

நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

பூரண ஆரோக்கியம்

என்பது யாதோரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைந்திருக்கிறது. ஆகையினாலே எப்பொழுதாவது மாறுதல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதாய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஔஷதமாகிய

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமெனக் கைப்பற்றுங்கள்.

அதி சீக்கிரத்தில் இம்மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணிகள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோகித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண்டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத்து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை. இதன்றி அவைகள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்.

☞ இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினால் இனாமாய்க் கொடுக்கப்படுகிற எங்கள் **180** பக்கங்கொண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22 பிராட்வே மதிராஸ்.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

535

(No. 1.)

THE TEST OF TIME!

FOR OVER THIRTY SEVEN YEARS

SCOTT'S EMULSION

has stood every rigid test that learned Physician could suggest.

LUNG TROUBLES,
COUGHS,
COLDS,
LOSS OF FLESH,
POOR APPETITE,

and as a Tonic and Tissue Builder for both Father and Son

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENGLAND

536

(No 2.)

CHAMBERLAIN'S COLIC, CHOLERA AND DIARRHŒA REMEDY.

வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, சீதபேதி இவைகளுக்கு



சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த

மருந்து.

இதனால்

வயிற்றுவலி, அதிசாரபேதி, சீதபேதி, வாந்திபேதி, வயிற்றுக்கடுப்பு முதலான குடல் நோய்கள் பலவும் ஒழியும்.

இந்த ஆச்சரியமான மருந்து, உலகத்திலுள்ள மற்ற மருந்துகளைவிட மனுஷகோடிகளுக்குதவியாய் நின்று, நோயையும் வேதனையையும் நீக்கி அநேக ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இம்மருந்தை ஒருதரம் குடித்தாலும், எவ்வித கொடிய வயிற்றுவலியும் போய்விடும். பொல்லாத சீதபேதிக்கும், மூன்று தரம் குடித்தால் போதும்; அவ்வளவோடு வேதனை நீங்கும், வியாதியும் ஒழியும், எப்போதும் பலிக்கும் மருந்து, ஒருபோதும் தப்புவதன்று,

இது, மூலிகைகளால் ஆன மருந்து, கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும். சின்ன புட்டி. ரூ 1. பெரிய புட்டி ரூ 2.